R.R. NO 260/65
2/2
P
MADRAS RECORD OFFICE
3298/L
13 JUL 1965
MADRAS

மேழிச்செல்வம்

விசுவாவசு ௵ ஆனி மீ

25 காசு

எல்லா பருவ காய்கறி சாகுபடி துவக்கவிழா

முதல் அமைச்சர் திரு M. பக்தவத்சலம் அவர்கள் துவக்க விழாவில் உரையாற்றுகிருர்

கண்ணுக்கு விருந்தாய் அமைந்த காய்கறித் தோற்றங்களில் குழந்தைகள்.

(இந்த விழா செயின்ட் பாட்ரிக் பள்ளியில் 22—4—1965 அன்று நடைபெற்றது.)

பருத்தியைப் பற்றிய முழு விவரங்களும் கொண்ட முதற் புத்தகம்! விற்பனைக்குத் தயார் !!

"பருத்தி முழு உரை"

(ஆங்கிலம்)

(COTTON MONOGRAPH)

எழுதியவர் :

ஆர். பாலசுப்ரமணியம்.

விலை ரூ. 40.

உங்கள் பிரதிக்கு இன்றே எழுதுங்கள்

விவரங்களுக்கு :

விவசாய நெறியாளர்,
சேப்பாக்கம்,
சென்னை–5.

மேழிச் செல்வம்

வருடாந்தர சந்தா	ரூ. 3·00
தனிப் பிரதி	ரூ. 0·25
ஆண்டு மலர்	ரூ. 0·50

உள்ளுரை

	பக்கம்
தீவிர விவசாயப் பகுதித் திட்டம் ..	5
பயறு வகைப் பயிர்களுக்கு நுண்ணுயிர் ஊட்டுதலும், (Bacterial) அதன் பயன்களும்.	6
பயிர் விளைச்சல் போட்டி 1963–64 ..	7
கரும்பின் எருச் செலவில் சிக்கனம் ..	8
விவசாயச் செய்திக் கதிர்	10
கீழ்பவானி திட்டத்தில் சோளம் சாகுபடி	12
அதிக மகசூல் பெற மானாவாரி நிலக் கடலைப் பயிருக்கு உரமிடுங்கள்	14
வீரிய ரகச் சோளம் சி. எஸ். எச்–1.	14
சென்னை மாநில வர்த்தகப் பயிர்களின் 1965-ம் ஆண்டு "எப்ரல்" திங்கள் விற்பனை நிலைமைப் பற்றிய விவரம்.	16
காய்கறி உற்பத்தியில் முன்னேற்றம் ..	20
வானொலிச் செய்திகள்	22
தென்னந்தோப்பு பராமரிப்பு ..	24
மஞ்சள் விற்பனை	26
சம்பா நிலங்களுக்கு அறுபது நாளில் செஸ்பேனியா.	28
எள் சாகுபடி விஸ்தீரணம் அதிகரிப்பு.	28
கரிசல் நிலத்திற்கு உரமிட்டு கம்புப் பயிரின் விளைவை உயர்த்தவும்.	29
1965-ம் ஆண்டு எப்ரல் மாதக் கால நிலை அறிக்கை.	30

விளம்பரங்கள் :

D.A.65/93	4
அமெரிக்கன் ஸ்பிரிங்	9, 15, 19
ராஜா பண்ணைத் தோட்டம் ..	21


ஆண்டுதோறும் எப்ரல் 1ந் தேதி 4% வரி இல்லாத வட்டி கணக்கில் கூட்டப்படுகிறது.
வரம்பு இல்லாமல் டெபாஸிட்டுகள் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.
எவ்வளவு தடவை வேண்டுமென்றாலும் பணம் எடுக்கலாம். பணம் போடலாம்.
ஒரு மைனர்கூட, கணக்கு ஆரம்பித்துக் கொள்ளலாம்.
படிக்காதவர்கூட, ஒரு படித்தவர் மூலம் கணக்கை வைத்துக்கொள்ளலாம்.
மோட்டார் வாகனங்கள் வாங்குவதற்காக செக்யூரிட்டியாக கணக்கை வைக்கும்போது கணக்கில் இருக்கும் தொகைக்கு வட்டி கிடைக்கிறது.
வாரிசு நியமன வசதிகள் உள்ளன.
5,000 ரூபாய் வரை உள்ள உரிமைகளுக்கு 'சக்சஷன்' சர்டிபிகேட் இல்லாமல் தீர்மானிக்கப்படும்.
போஸ்ட் ஆபீஸ் சேவிங்ஸ் பாங்கில் கணக்குத் தொடங்கி இந்த நன்மையை அடையுங்கள்
பாங்காகும்.
வசதியான ஏற்பாடுகள்.
40,000
மூலம் சேவை புரிகிறது.
தேசிய சேமிப்பு நிறுவனம்
OA-65/93

மேழிச்செல்வம்

சுழன்றுமேர் பின்ன துலகம் அதனா
லுழந்தும் உழவே தலை.

மலர் 22	விசுவாவசு௵ ஆனி௴—1965—ஜூன்-ஜூலை	இதழ் 6

தீவிர விவசாயப் பகுதித் திட்டம்

உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து, தேவையான அளவு உற்பத்தியைப் பெருக்க பல வழிகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றால் உற்பத்தி பெருகத்தான் செய்தது. ஆனால் உற்பத்திப் பெருக்கம் உபயோகத்துக்கு வேண்டிய அளவும், தேவையான முறையிலும் பெருகவில்லை. சில நாட்களுக்கு முன் ஏற்பட்ட உணவுப் பற்றுக்குறையும், உணவுப் பொருட்களின் விலையேற்றமும், விவசாய உற்பத்தி மேலும் பெருகவேண்டும் என்பதை உணர்த்துகின்றன.

தஞ்சாவூரில் ஆரம்பிக்கப்பட்ட தீவிர உற்பத்தித் திட்டமும் பிற திட்டங்களும் அதி விரைவில் உற்பத்தியைப் பெருக்கும் வழிகளைக் காட்டியுள்ளன. இவைகளிலிருந்து பெற்ற அனுபவத்தினால் ஏற்பட்ட ஊக்கமே தீவிர விவசாயப் பகுதித் திட்டம் ஏற்பட உதவியது.

தீவிர விவசாயப் பகுதித் திட்டம் என்பது ஒரு அதிவிரைவுத் திட்டம். இதனால் நெல், சோளம், ராகி, நிலக்கடலை ஆகிய பயிர்களில் நவீன சாகுபடி மூலம் அமோக விளைச்சலை ஏற்படுத்துவதாகும். இது ஒரு மூன்று வருடத் திட்டம். இத் திட்டம் விவசாய விளைவுப் பெருக்கத்திற்கான விவசாயப் பெருமக்கள், விவசாய இலாகாவினர், கூட்டுறவு இலாகாவினர், நீர்ப்பாசன இலாகாவினர் இவர்களைக் கொண்ட ஒருங்கிணைந்த கூட்டுப் பணியாகும்.

இத் திட்டம் செங்கல்பட்டு, கோயமுத்தூர், மதுரை, திருநெல்வேலி ஆகிய நான்கு மாவட்டங்களில் உள்ள 133 வட்டாரங்களில் 1965-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதி முதல் அமுலில் இருக்கிறது.

நோக்கங்கள் :

* மேற்கூறிய மாவட்டங்களில், நெல், சோளம், ராகி இவற்றை நவீன சாகுபடி முறைப்படி பயிர் செய்தல்.
* இப் பயிர்களைத் தவிர மாற்றுப் பயிர் செய்யும் நிலக்கடலை, பருத்தி இவற்றினையும் நவீன சாகுபடி முறைப்படி பயிர் செய்தல்.
* நவீன சாகுபடிக்குத் தேவையான பொறுக்கு விதை, இரசாயன உரம், பூச்சி பூஞ்சாண நாசினிகள், சாகுபடி சாதனங்கள் இவற்றை விநியோகித்தல்.
* நவீன சாகுபடிக்குத் தேவையான பொருள், நிதி தேவைகளைப் பண்ணைத் திட்டத்தின் மூலம் நிர்ணயித்து அவைகள் கிடைப்பதற்கான ஏற்பாடுகள் செய்தல்.
* நவீன சாகுபடி முறைகளை செயல், பலன் நிரூபணங்களின் மூலம் விவசாயிகளுக்கு எடுத்துக் காட்டுதல்.
* பண்ணைத் திட்டத்தின் பிரகாரம் நவீன சாகுபடி முறைகளை விவசாயிகள் பின்பற்ற தொடர்ந்து அறிவுரைகளையும் உதவிகளையும் செய்தல்.
* நவீன சாகுபடி முறைகளை விஸ்தரிப்புக் கல்வி மூலமாக விரைவில் விவசாயிகளிடம் பரப்புதல்.

அமுல் செய்யும் விதம் :

* ஒவ்வொரு பகுதியிலும் அனுசரிக்கப்பட வேண்டிய நவீன சாகுபடி முறைகளை முதலில் நிர்ணயம் செய்து கொள்ளுதல்.

(13-ம் பக்கம் பார்க்கவும்.)

பயறு வகைப் பயிர்களுக்கு நுண்ணுயிர் ஊட்டுதலும் (BACTERIAL INOCULATION) அதன் பயன்களும்

[கே. எஸ். நாயர், பி. பி. இராமசாமி, நுண்ணுயிர் பிரிவு, விவசாயக் கல்லூரி ஆராய்ச்சிக் கூடம், கோவை.]

புரதச் சத்தில் (Protein) தழைச் சத்து (Nitrogen) மிகுதியான பங்கு பெற்றிருப்பதால் அது நமது வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒன்றாகிவிட்டது. பிராண வாயுவும், நைட்ரஜனும் நாம் சுவாசிக்கும் காற்றில் பெரும் அளவில் கலந்திருக்கின்றன. நைட்ரஜன் மட்டும் தனித்து தாவரங்களுக்கோ, பிராணிகளுக்கோ பயன்படுவதில்லை யாதலால், நைட்ரஜன் உபயோகப்படக்கூடியதாக மாறுவதற்கு அது மற்ற மூலகங்களுடன் சேர்ந்து கூட்டுப் பொருள்களாக மாறவேண்டும்.

தழைச் சத்தைச் சேர்த்து வைத்தல்

நுண்ணுயிர் ஊட்டியபின் பயறு வகைத் தாவரங்களைப் பயிரிடுவதன்மூலம் விவசாயிகள் தங்கள் பயிர்களுக்கு வேண்டிய தழைச் சத்தை காற்றிலிருந்து பெற முடியும். அந்தந்த பயறு வகைச் செடிகளுக்கேற்ற நுண்ணுயிர்களை வளர்த்து விதைப்பதற்கு முன் விதைகளோடு அவற்றைக் கலந்து விதைப்பதற்கு நுண்ணுயிர் ஊட்டுதல் என்கிறோம்.

இந்த பயறு வகைத் தாவரங்கள் நுண்ணுயிர்களுக்குத் தேவையான சர்க்கரையையும், சக்தியையும் கொடுக்கின்றன. நுண்ணுயிர்கள் இந்த சக்தியைப் பயன்படுத்திக் காற்றிலுள்ள நைட்ரஜனைத் தாவரங்கள் எளிதில் உட்கொள்ளக்கூடிய பொருளாக மாற்றித் தருகின்றன. தாவரங்கள் இவ்வாறு மாற்றப்பட்ட தழைச் சத்தை எடுத்துக்கொண்டு புரதச் சத்தைத் தயாரிக்கின்றன.

ஒவ்வொரு வகை நுண்ணுயிரும் எந்த அளவிற்கு காற்றிலுள்ள நைட்ரஜனைச் சேர்த்து வைக்கிறது என்று கணக்கிடுவது கடினமாகும். அது கீழ்க்கண்டவற்றிற்கேற்ப மாறுபடும் :—

(1) பயிரிடப்படும் பயறு வகையைப் பொறுத்தது.

(2) உட்புகுத்தப்படும் நுண்ணுயிர்களின் திறமையைப் பொறுத்தது.

(3) நில வளத்தைப் பொறுத்தது.

(4) பயிர் வளர்வதற்குத் தேவையான உணவுப் பொருள்கள் மண்ணில் இருப்பதைப் பொறுத்தது.

நுண்ணுயிர் ஊட்டுதலின் பலன்கள்

சக்திவாய்ந்த சிறந்த நுண்ணுயிர்களை (Bacteria) விதைகளுக்கு உட்புகுத்துவதுதான் இதில் முக்கியமானது. இதனால் விதை முளைத்து, செடி துளிர் விட்டு வளரும் பொழுது நுண்ணுயிர்கள் வேர்தூவிகளுக்கு அருகிலேயே இருப்பதால் வேர்தூவிகளுக்குள் நுழைந்து வேர் முடிச்சுகளை உண்டுபண்ணுகின்றன.

அதிக விளைச்சலையும், தரமான உற்பத்தியையும் பெறுவதற்குச் சிறந்த வீரியம் வாய்ந்த நுண்ணுயிர்களை உட்புகுத்துதல் வேண்டும். நுண்ணுயிர் ஊட்டப்பெற்ற செடிகள் அதிக அளவிற்கு புரதச் சத்தைச் சேர்த்து வைக்கின்றன. பயறு வகைத் தாவரங்கள் நிலத்திற்கு தழைச் சத்தைக் கொடுக்கின்றன. அவை நல்ல தரமான உரங்களை உண்டாக்குவதற்கு உதவுகின்றன. நிலத்தில் இயற்கையாக உள்ள நுண்ணுயிர்களைவிட விதைகளில் உட்புகுத்தப்பட்ட சக்திவாய்ந்த நுண்ணுயிர்கள் 20 சதவிகிதம் வரை அதிகமான அளவில் புரதச் சத்தைச் சேர்த்து வைக்கின்றன என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

நுண்ணுயிர் ஊட்டுவதின் அவசியம்

சிறந்த விளைச்சலை (பயறு வகைத் தாவரங்களில்) உண்டாக்கக்கூடிய நுண்ணுயிர்கள் பயிரிடும் நிலங்கள் எல்லாவற்றிலும் இருப்பதில்லை. தவிர மண்ணில் காணப்படும் பெரும்பான்மையான நுண்ணுயிர்கள் அதிக அளவு தழைச் சத்தைச் சேர்த்து வைக்கும் சக்தியற்றவைகளாக இருக்கின்றன. உதாரணமாக துவரையில் உள்ள நுண்ணுயிர்கள் 110 இடங்களிலிருந்து எடுத்து வரப்பட்டன. அவைகளில் 46 நுண்ணுயிர் வகைகள் வேர் முடிச்சுகளை உண்டுபண்ணும் சக்தியே இல்லாதவைகளாக இருந்தன. 17 நுண்ணுயிர் வகைகள் மிகவும் குறைந்த அளவு தழைச் சத்தைச் சேர்த்து வைத்தன. 22 நுண்ணுயிர் வகைகள்தான் அதிக அளவு தழைச்சத்தைச் சேர்த்து வைக்கும் திறமை பெற்றிருந்தன. 25 வகைகள் இந்த இரண்டு வகைகளுக்கும் இடை நிலையில் இருந்தன. பயறு வகைத் தாவரங்களில் அதிக விளைச்சலை உண்டு பண்ண நமது மாநிலத்தில் அநேக நிலங்களுக்கு சக்திவாய்ந்த வளர்ப்பு நுண்ணுயிர்கள் உட்புகுத்த வேண்டும். இவ்வகை நுண்ணுயிர்களை ஆரம்ப காலத்தில் அதிக அளவிற்கு தழைச் சத்தைச் சேர்த்து வைக்கின்றன.

வேர்முடிச்சுகளும், தழைச் சத்தும்

ஆணி வேரின் மேல்பாகத்தில் கொத்துக் கொத்தாக காணப்படும் வேர்முடிச்சுகள் எல்லாம் நுண்ணுயிர் ஊட்டியதால் ஏற்பட்டவை. இந்த வேர் முடிச்சுகளின் உள்பாகத்தில் சிகப்பு நிறமாக இருந்தால் அவை அதிக அளவு தழைச்சத்தைச் சேர்த்து வைக்கும். பக்க வேர்களில் காணப்படும் வேர்முடிச்சுகள் இயற்கையாக நிலத்திலுள்ள நுண்ணுயிர்களினால் ஏற்பட்டவை. பயறு வகைத் தாவரங்கள் வளர்ச்சி அடையும் காலத்தில் வேர் முடிச்சுகளில் சேர்த்து வைக்கப்பட்ட தழைச் சத்தை இலைகளிலும், தண்டுகளிலும், விதைகளிலும்

புரதச் சத்தாக மாற்றி வைக்கின்றன. விதை முற்றும் காலத்தில் வேர் முடிச்சுகள் அழுகிப்போக ஆரம்பிக்கின்றன.

வளர்ப்பு நுண்ணுயிர்கள்

வளர்ப்பு நுண்ணுயிர்கள் என்பது தகுந்த உணவுப் பொருள்களில் இனப் பெருக்கம் அடைந்த நுண்ணுயிர்கள் ஆகும். வளர்ப்பு நுண்ணுயிர்கள் எல்லாம் உயிரோடு இருக்கின்றன. ஆகையால் அவைகளைத் தகுந்த முறையில் கையாள வேண்டும். குடுவைகளில் அடைக்கப்பட்டுள்ள வளர்ப்பு நுண்ணுயிர்களை இலேசாக சூடாக்கினாலும் அவை இறந்து விடும் அல்லது அவைகளின் சக்தி குறைந்துவிடும். நுண்ணுயிர்க் குடுவைகளை குளிர்ச்சியான இடத்தில் வைத்திருக்கவேண்டும்.

ஓரளவிற்கு சூரிய வெப்பத்தை நுண்ணுயிர்கள் தாங்கக் கூடிய சக்தி பெற்றிருந்தாலும், நுண்ணுயிர்க் குடுவைகளையோ அல்லது நுண்ணுயிர் ஊட்டப்பட்ட விதைகளையோ சூரிய ஒளியில் அதிக நேரம் வைத்திருக்கக்கூடாது. நுண்ணுயிர் ஊட்டப்பெற்ற விதைகள் உலர்ந்துவிட்டால் அவைகளில் உள்ள நுண்ணுயிர்கள் இறந்துவிடும், ஆகையால் நுண்ணுயிர் ஊட்டிய விதைகளை மறு நாளே விதைத்துவிட வேண்டும். எப்படியும் 48 மணி நேரத்திற்குமேல் விதைக்காமல் வைத்திருக்கக் கூடாது.

மண்ணில் நுண்ணுயிர்கள்

நுண்ணுயிர் ஊட்டுவதால் அதிக நன்மையடைய வேண்டுமானால், நிலம் பயறுவகைத் தாவரங்கள் வளர்வதற்கு வேண்டிய அளவு சத்துக்களைப் பெற்றிருக்க வேண்டும். நிலத்தை நன்றாக உழுது வைத்திருக்க வேண்டும்; மண்ணில் சுலபமாகக் கிடைக்கக்கூடிய சுண்ணாம்பு, பாஸ்பரஸ், சாம்பல் சத்துக்கள் இருக்க வேண்டும்; விதை நன்றாக முளைத்து வளரக் கூடியதாக இருக்க வேண்டும்; விதைத்து சில நாட்களுக்குள் மழை பெய்வது சிறந்ததாகும்.

நுண்ணுயிர் தயாரித்தல்

முதலில் செடிகளில் நுண்ணுயிர் ஊட்டி எல்லா வகையான நுண்ணுயிர்களும் சோதனை செய்து பார்க்கப்படுகின்றன. புதிய வகையான நுண்ணுயிர்கள் ஒவ்வொரு வருடமும் பல இடங்களிலிருந்து கொண்டுவரப்படுகின்றன. இவை தனித்தனியாகப் பிரித்து சோதனை செய்யப்படுகின்றன. பிறகு அவைகளில் சிறந்த நுண்ணுயிர் ஒவ்வொரு வகைத் தாவரத்திற்கும் பொறுக்கி எடுக்கப்படுகிறது. பின் பொறுக்கி எடுக்கப்பட்ட நுண்ணுயிர்கள் அவைகளுக்குத் தேவையான உணவுப் பொருள்களில் இனப் பெருக்கம் செய்யப்படுகின்றன.

உபயோகிக்கும் முறை

எந்த பயறு வகைத் தாவரத்திற்கு நுண்ணுயிர் ஊட்டப்படவேண்டுமோ, அந்தவகை வளர்ப்பு நுண்ணுயிர்களை உபயோகிக்க வேண்டும். நுண்ணுயிர்க் குடுவைகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேதிகளுக்கு முன்பாகவே உபயோகிக்க வேண்டும். விதைப்பதற்கு முதல் நாள் விதைகளுக்கு நுண்ணுயிர் ஊட்டுதல் வேண்டும். அதற்காக பயறு வகை விதைகளை சுத்தமான அகலமான பாத்திரத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும். (மண் பாத்திரம், பித்தளை, தாமிரம் போன்றவைகளை உபயோகிக்கக் கூடாது). ஒவ்வொரு நுண்ணுயிர் குடுவையோடும் சிறிது கால்சியம் பாஸ்பேட் (Calcium phosphate) கொடுக்கப்பட்டிருக்கும். கொடுக்கப்பட்டுள்ள கால்சியம் பாஸ்பேட்டை இரண்டு கோப்பை சுத்தமான குளிர்ந்த நீரில் கலந்துகொள்ள வேண்டும். குடுவையை மூடியுள்ள பஞ்சை எடுத்துவிட்டு ஒரு கோப்பையிலுள்ள கால்சியம் பாஸ்பேட் தண்ணீரை குடுவையினுள் ஊற்றி நன்றாகக் குலுக்கவேண்டும். உள்ளேயுள்ள நுண்ணுயிர்கள் தண்ணீரில் கலந்து கலங்கி இருக்கும். பிறகு மற்றொரு கோப்பைத் தண்ணீரையும் ஊற்றவேண்டும். மறுபடியும் நன்றாகக் கலக்கி நுண்ணுயிர் கலந்த நீரை விதைகளின் மேல் ஊற்றிக் கைகளினால் நன்றாகக் கலக்கி விடவேண்டும். எல்லா விதைகளும் ஈரம் அடையும் வரை கலக்கிவிட வேண்டும். அதிக நீரை ஊற்றக்கூடாது. பிறகு விதைகளை நிழலில் உலர வைக்கவேண்டும். மறுநாள் காலை நுண்ணுயிர் ஊட்டப்பெற்ற விதைகளை வழக்கம்போல் விதைத்துவிடவேண்டும். முப்பது ராத்தல் விதைக்கு ஒரு நுண்ணுயிர்க் குடுவை வீதம் உபயோகிக்க வேண்டும்.

மேற்குறிப்பிட்ட நுண்ணுயிர்க் குடுவைகளை, பூஞ்சாண நிபுணர், விவசாயக் கல்லூரி, கோவை-3, என்ற முகவரியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பயிர் விளைச்சல் போட்டி 1963-64

மாவட்ட பரிசு பெற்றோர் விவரம்:

பரிசு நிலை. (1)	பெயர். (2)	விளைச்சல்/ஏக்கர் கிலோவில். (3)
	தஞ்சாவூர்	
	நெல்	
முதற் பரிசு ..	திரு. வி. சேஷாத்திரி, கார்குடி, திருவையாறு வட்டம்.	2,736 கிலோ கிராம்.
இரண்டாம் பரிசு..	திரு. என். கே. எஸ். மொஹிதீன் பகீர், தேத்தயாலம்.	2,694 ,,
	திருச்சிராப்பள்ளி	
	கரும்பு முக்கிய பட்டம்	
முதற் பரிசு ..	திரு. ரா. கருப்பணன், கம்மண நல்லூர், குளித்தலை.	94·546 டன்கள்.
	மதுரை	
	கரும்பு தனிப் பட்டம்	
முதற் பரிசு ..	திரு. கு. சுப்பையா, சிங்கார கோட்டை, திண்டுக்கல் வட்டம்.	103·257 ,,

பருவம் தவறினல் விளையுளும் தவறும்!

கரும்பின் எருச் செலவில் சிக்கனம்

[கொ. ஏகாம்பரம், இ.ரா. பெருமாள்ராஜா, ச. ஜோதிமூர்த்தி,
மத்திய கரும்பு ஆராய்ச்சி நிலையம், கடலூர்.]

தமிழ்நாட்டில் பயிராகும் பணப் பயிர்களுள் (cashcrops) கரும்பும் ஒன்றாகும். நட்ட கரும்பு அறுவடைக்கு வர ஏறத்தாழ ஒரு ஆண்டு காலம் ஆகிறது. ஆகவே மற்ற பயிர்களுக்கு ஏற்படும் சாகுபடிச் செலவைக் காட்டிலும் 2–3 பங்கு அதிகமாகவே கரும்புச் சாகுபடிக்கு ஆகிறது. கரும்புச் சாகுபடிச் செலவில் எருவிற்காக கணிசமான தொகை, அதாவது மூன்றில் ஒரு பாகம் அல்லது நான்கில் ஒரு பாகம் செலவாகிறது. இவ்வாறு எருவிற்காக ஏற்படும் செலவை ஓரளவு குறைத்தால் குடியானவர்களுக்கு மிக்க பயனுள்ளதாக இருக்கும்.

கரும்பு மகசூலையும், சர்க்கரை மகசூலையும் பாதிக்காத வகையில், எருவை இலைகளின் மூலம் கொடுப்பதால் எந்த அளவுக்குக் குறைவாக இடலாம் என்ற கருத்தில் கடலூர் மத்திய கரும்பு ஆராய்ச்சி நிலையத்தில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. பரிசோதனையின்போது கண்ட முடிவுகள் பின்வருமாறு :—

உர அளவும் இடும் முறையும் (1)	கரும்பு மகசூல் எக்கருக்கு டன்னில் (2)	கரும்பின் எண்ணிக்கை எக்கருக்கு (3)	சர்க்கரை சத்து விகிதம் (4)	சர்க்கரை மகசூல் எக்கருக்கு டன்னில், (5)
1. 150 ராத்தல் தழைச் சத்து நிலம் மூலம்.	40·6	33,900	13·3	5·4
2. 100 ராத்தல் தழைச் சத்து நிலம் மூலம் + 25 ராத்தல் தழைச் சத்து இலை மூலம்.	41·6	33,800	13·4	5·6
3. 100 ராத்தல் தழைச் சத்து நிலம் மூலம் + 50 ராத்தல் தழைச் சத்து இலை மூலம்.	41·6	34,500	13·4	5·5

மேற்படி சோதனைகளின்படி எரு இடும் முறையில் சிறிது மாற்றம் செய்தால் கணிசமான அளவிற்கு எரு அளவைக் குறைக்கலாம் என்பது தெளிவாகிறது. அதாவது, 150 ராத்தல் தழைச்சத்தை நிலம் மூலம் இடுவதால் கிடைக்கும் மகசூலை 125 ராத்தல் தழைச் சத்தைக் (100 ராத்தல் தழைச் சத்து நிலம் மூலமாகவும் 25 ராத்தல் தழைச் சத்தை இலை மூலமாகவும்) கொண்டே அடையலாம் என்பது தெளிவாகிறது.

இதுபோன்ற மாதிரி சோதனைகள் இவ்வாண்டு (1964-65) நமது மாநிலத்தில் தனி வேளாண் விளக்குனர்கள் (கரும்பு) மூலமாக அநேக இடங்களில் விவசாயிகளின் நிலங்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இதுவரை கிடைத்த விவரங்களிலிருந்து சாதாரணமாக 200 ராத்தல் தழைச் சத்து நிலம் மூலம் கொடுத்த பயிருக்கும் 100 ராத்தல் தழைச் சத்து நிலம் மூலமாகவும் 50 ராத்தல் தழைச் சத்து இலை மூலமாகவும் கொடுத்த பயிருக்கும் வளர்ச்சியில் யாதொரு வித்தியாசமும் இல்லை எனத் தெரிகிறது. இஃது இவ்வாராய்ச்சிப் பண்ணையில் கண்டுள்ள முடிவுகளை ஒத்திருக்கிறது. அதாவது கரும்பிற்கு சாதாரணமாக எருவை மண்ணின் மூலம் இடுவதற்குப் பதிலாக எருவின் முதல் பகுதியை எப்போதும் போல் மண்ணின் மூலமாகவும் மற்றுமொரு பகுதியில் பாதியை இலை மீது தெளிப்பான் மூலம் (Sprayer) தெளிப்பதால் கரும்பு மகசூலும் சர்க்கரை மகசூலும் பாதிக்கப்படாதிருப்பதோடு எரு அளவில் 50 ராத்தல் தழைச் சத்து சேமிக்க முடிகிறது. இதனைப் பரிசோதிக்க வேண்டுவோர் பின்கூறிய முறைப்படி தங்கள் பயிரிலும் பரிசோதித்துப் பார்த்தால் உண்மையை நன்கு உணரலாம்.

செய்முறை—

சாதாரணமாக நமது மாநிலத்தில் கரும்பிற்கு 200 லிருந்து 250 ராத்தல் தழைச்சத்து இரண்டு சம பாகங்களாக (2-வது மாதத்திலும், 3-4 மாதத்திற்குள்ளும்) அமோனியம் சல்பேட், பிண்ணாக்குக் கலந்த கலவையாகவோ அல்லது வேறு கலப்பு உரமாகவோ இடப்படுகிறது. அதன்படி எப்போதும்போல் முதல் பகுதி எருவை (100–125 ராத்தல் தழைச் சத்து) மண்ணில் 2 மாதத்தில் இடலாம். இரண்டாம் முறை எருவிடும்போது 50 ராத்தல் தழைச் சத்தை இரு முறைகளில் (முறைக்கு 25 ராத்தல் தழைச் சத்தாக நீரில் கரைத்து இலை மீது தெளிப்பான் (Sprayer) கொண்டு தெளிக்கவேண்டும். இதனை எளிதில் நீரில் கரையக்கூடிய யூரியா மூலமாகக் கொடுப்பது சிறந்தது என்று ஆராய்ச்சியின் மூலம் தெளிவு செய்யப்பட்டுள்ளது. 50 ராத்தல் தழைச் சத்திற்கு தேவையான யூரியாவின் அளவு 110 ராத்தல் அல்லது 50 கிலோ ஆகும். இதனை இரு சம பாகங்களாக இரு முறைகளில் 10 நாட்கள் இடைவெளிவிட்டு (90 நாள், 100-வது நாள்) நீரில் கரைத்து அதிகாலையில் கரும்பின் இலை மீது தெளிப்பான் (Sprayer) மூலம் தெளிக்கவேண்டும். அதாவது ஒரு முறைக்கு எக்கருக்கு 55 ராத்தல் அல்லது

(25-ம் பக்கம் பார்க்கவும்)

தமிழ்நாடு விவசாயத் துறை நெறியாளரால் C.1. 40404-64 தேதி 21-4-64 உத்தரவின்படி

1964-65 " ரேட் கான்ராக்ட் " திட்டத்தின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட

ஸ்ப்ரேயர்கள்



' கேடார் '
அசைப்பு ஸ்ப்ரேயர்



' மாருதி '
ஃபுட் ஸ்ப்ரேயர்



' மாருத் '
கையமுத்த ஸ்ப்ரேயர்



' கேடார்-கோஃபி '
அசைப்பு ஸ்ப்ரேயர்

தயாரிப்பாளர்கள் :

அமெரிக்கன் ஸ்பிரிங் அண்டு பிரஸ்ஸிங் ஒர்க்ஸ் பிரைவேட் லிமிடெட்,

மார்வே ரோடு, மலாடு, பம்பாய்-64.

தமிழ்நாடு, மைசூர் விநியோகஸ்தர்கள் :

S. V. ரங்கஸ்வாமி அண்டு கம்பெனி பிரைவேட் லிமிடெட்,

75, கலாசிபாளையம் நியூ எக்ஸ்டென்ஷன், தபால் பெட்டி நெ. 539, பெங்களூர்-2.

விவசாயச் செய்திக் கதிர்

[கே. எம். சுந்தரம், டி. ரகோத்தமராவ், விரிவிணைப் பிரிவு, கோவை.]

'2701 -புதிய தலை சாயாத நெல் இனம்

குறுவைச் சாகுபடிக்குகந்த தலைசாயாத ஒரு புதிய நெல் இனம் ஆடுதுறை பிராந்திய ஆராய்ச்சிப் பண்ணையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஏக்கருக்கு 4444 ராத்தல் வரை மகசூல் அளிக்கவல்ல இந்த இனம் ஏ.டி,டி. 3 ரகத்தை. உறுதியான தாளையுடைய சி.ஏச். 42 என்ற சீன ரகத்துடன் கரு இணைப்பால் தோற்றுவிக்கப்பட்டது. ஆடுதுறை பிராந்திய ஆராய்ச்சிப் பண்ணையிலும், சாகுபடியாளர்களின் வயல்களிலும் இந்த இனம் நல்ல மகசூல் அளித்திருக்கிறது. இதன் பயிர்க்காலம் 102 நாட்கள். அதாவது ஏ டி.டி 3 ரகத்தைவிட ஒரு வாரம் அதிகம்-தானியத்தின் அளவு, உருவம், தரம் ஆகியவை ஏ.டி.டி. 3 ரகத்தைப் போன்றே இருக்கும். அரிசியும் வெண்மை நிறமுடையது.

தஞ்சை மாவட்டத்தில் சுமார் ஒரு இலட்சம் ஏக்கர் விஸ்தீரணத்தில் சாகுபடியாகும் ஏ.டி.டி. 3 ரகத்திற்குப் பதில் இந்த இனத்தைச் சாகுபடி செய்வதனால், சாதாரணமாக அறுவடை சமயத்தில் கதிர்கள் சாய்வதால் மணிகள் உதிர்ந்து சேதமாவதைப் பெருமளவில் தவிர்த்து சிறந்த மகசூல் பெறலாம்.

இந்த இனம் ஒரு புதிய நெல் ரகமாக வெளியிடப்படும் நாளை, விவசாயிகள் விரைவில் எதிர்பார்க்கலாம்.

நஞ்சைத் தரிசில் பருத்தியில் திருந்திய முறைகள்

தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் நஞ்சைத் தரிசில் பருத்தி சாகுபடி செய்வோருக்கு ஓர் நற்செய்தி! ஆடுதுறை மணப்பாறை ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட பரிசோதனைகளிலிருந்து நஞ்சைத் தரிசில் பருத்தியில் சிறந்த மகசூல் அடையத் தேவையான உர அளவுகள், செடிகளுக்கிடையே தேவயான இடைவெளி ஆகியவற்றைப்பற்றிய விவரங்கள் தெரியவருகின்றன. அவற்றைக் கடைபிடிப்பதன் மூலம் நஞ்சைத் தரிசில் பருத்தி சாகுபடி செய்வோர் சிறந்த மகசூலையும் இலாபத்தையும் அடையலாம்.

ரகம்	பி. 216F (பஞ்சாப் ரகம்)	
இடைவெளி	செடிக்குச் செடி.	வரிசைக்கு வரிசை
தஞ்சை மாவட்டத்திற்கு	$\frac{3}{4}$ அடி	1 அடி 6 அங்குலம்
திருச்சி மாவட்டத்திற்கு	$\frac{1}{2}$ அடி	1 அடி 6 அங்குலம்

உர அளவுகள் ஏக்கருக்கு

இரு மாவட்டங்களுக்கும்

18 கிலோ கிராம் மணிச்சத்து-அடி உரமாக

13·2 கிலோ கிராம் தழைச் சத்து-விதைத்து மூன்று வாரத்தில்

13·2 கிலோ கிராம் தழைச் சத்து–விதைத்த ஆறுவது வாரத்தில்

கரிசல் மண்ணில் ரஷ்யப் பருத்தி

தமிழ் நாட்டின் தென் மாவட்டங்களிலுள்ள கரிசல் நிலத்தில் மானாவாரியில் பி.ஆர்.எஸ். 72 என்ற ரஷ்யப் பருத்தியைச் சாகுபடி செய்யலாம். ஆம்! கோவில்பட்டி ஆராய்ச்சி நிலையத்தில் மேற்கொள்ளபபட்ட பரிசோதனைகள் இதைத் தெளிவுபடுத்துகின்றன. இப்பரிசோதனையில் ஏக்கருக்கு 560 கிலோ பருத்தி மகசூல் கிடைத்தது. வரிசைக்கு வரிசை 1 அடி 6 அங்குலமும், செடிக்குச் செடி 6 அங்குல இடைவெளியும் விடப்பட்டு, ஏக்கருக்கு 40 ராத்தல் தழைச்சத்து அளிக்கத் தேவையான உரமும் இடப்பட்டது. பருத்தியின் இழை நீளம் 2·27 செ. மீட்டர் கட்டுமால் 38 3 சதவீதம்.

நிலக்கடலையில் தீவிர சாகுபடி முறைகள்

திருந்திய ரகங்கள்	கொத்து ரகம்	டி.எம்.வி. 2 (105–110 நாட்கள்)
	படரும் ரகம்	டி.எம்.வி. 1 (135–145 நாட்கள்)

விதையளவு:	இறவைப் பயிர்–	கொத்து ரகம்.	ஏக்கருக்கு 45-50 கிலோ கிராம் கடலை
		படரும் ரகம்.	40-45 கிலோ கிராம் கடலை
	மானாவாரி	கொத்து ரகம்.	55 கிலோ கிராம்.
		படரும் ரகம்.	40–45 கிலோ கிராம்.

விதைப்பக்குவம் :—விதைக்கு முன் விதைகளை 50 கிலோ கிராம் விதைக்கு 4 அவுன்ஸ் கரிம பாதரச மருந்துகளைக் கலக்கவேண்டும். விதைப்பிற்கு இரண்டு மணி நேரத்திற்கு முன் மருந்து கலந்தால் போதும். மருந்து கலந்த விதைகளை வெகு நேரம் வைத்தால் முளைப்பு பாதிக்கப்படும்.

விதைத்தல்:- விதைக்கும்போது கலப்பைக்குப் பின் இருவர் செல்ல வேண்டும். இதில் ஒருவர் விதைக்க, மற்றொருவர் அதிகமாக இடைவெளியுள்ள இடங்களில் விதைகளை இடவேண்டும். குளிர் காலத்தில் (நவம்பர்-டிசம்பர்) விதைப்பது கூடாது.

இறவை

	வரிசையில்	இடைவெளி வரிசைக்கு வரிசை
கொத்து	6 அங்.	9 அங்.
படரும் வகை	1 அடி.	1 அடி.

மானுவாரி

கொத்து	6 அங்.	6 அங்.
படரும் வகை	9 அங்.	9 அங்.

உரமும் உரமிடுதலும்

இறவைப் பயிரில் அடி உரமாக 5 டன் தொழு உரம் அல்லது நன்கு மக்கிய கம்போஸ்டு உரமிடலாம். கம்போஸ்டைவிட, தொழு உரம் சிறந்ததென்று பரிசோதனைகள் மூலம் தெரியவருகின்றன.

நேர் உரமாகவோ அல்லது கலப்பு உரமாகவோ ஏக்கருக்கு 7 கிலோ கிராம் தழைச் சத்து, 14 கிலோ கிராம் பாஸ்பேட், 21 கிலோ கிராம் பொட்டாஷ் ஆகியவை தேவைப்படும்.

நேர் உரமாக இட கீழ்க்கண்டவை தேவைப்படும்:—

(அ) 34 கிலோ கிராம் அமோனியம் சல்பேட் அல்லது கால்சியம் அமோனியம் நைட்ரேட் அல்லது 15 கிலோ கிராம் யூரியா.

(ஆ) 90 கிலோ கிராம் சூப்பர் பாஸ்பேட்.

(இ) 34 கிலோ கிராம் மியூரியேட் ஆஃப் பொட்டாஷ்.

கலப்பு உரமாக இட, 150 கிலோ கிராம் 7-ம் நெம்பர் கலப்பு உரத்தை இடவேண்டும். இவற்றை விதைப்பிற்கு முன் மண்ணில் இடவேண்டும். பிறகு 5-7 கிலோ கிராம் வெண்காரத்தை இடவும். வெண்காரத்தை மற்ற உரங்களோடு சேர்த்து இடக்கூடாது.

மானுவாரிப் பயிரில் அடியுரமாக $2\frac{1}{2}$ டன்கள் கம்போஸ்டு அல்லது தொழு உரம் இடவும். செயற்கை உரம் ஒரு ஏக்கருக்கு தழைச் சத்து $4\frac{1}{2}$ கிலோ கிராம், பாஸ்பேட் 9 கிலோ கிராம், பொட்டாஷ் $13\frac{1}{2}$ கிலோ கிராம் அல்லது ஏழாம் எண் கலப்பு உரம் ஏக்கருக்கு 90 கிலோ கிராம் இடவும். ஏக்கருக்கு 2–4 கிலோ கிராம் வெண்காரம் இடவும்.

பின்செய் நேர்த்தி

முதல் கொத்தும், களை யெடுப்பும்—	விதைத்து 20-22 நாட்களுக்குப்பின் கொத்துக் கடலைக்கு, பின் இரண்டு நாட்கள் கழித்து படரும் கடலைக்கு.
இரண்டாம் கொத்தும், களையெடுப்பும்—	முதல் கொத்துக்கு 15–20 நாட்களுக்குப் பின் செடிகளுக்கு மண் அணைக்கும் வகையில் செய்யவும்.

45-வது நாளுக்குப்பின் கொத்துதலோ களையெடுப்போ செய்யக்கூடாது. அவ்வாறு செய்தால் பூக்கள் தோன்றுவது பாதிக்கப்படும்.

நீர்ப்பாசனம்

விதைத்த உடனே முதல் பாசனம் செய்யவும். 5 நாட்கள் கழித்து உயிர்த் தண்ணீர் விடவும். பின் 15-20 நாட்களுக்கு நீர் விடக்கூடாது. பின் 10 நாட்களுக்கொரு முறை நீர் விடவும். 100 நாட்களுக்குப்பின் நீர் விடக்கூடாது.

பயிர்ப் பாதுகாப்பு

முதல் களையெடுப்புக்குப்பின் பின்வரும் மருந்துக் கலவையை தூவவும்:—

5 கிலோ கிராம் கந்தகம்	—	டிக்கா இலைப்புள்ளி நோயைத் தடுக்க.
5 கிலோ கிராம் டி.டி.டி. 5% தூள்	—	சுருள்பூச்சியை ஒழிக்க.
5 கிலோ கிராம் பி.எச்.சி. 10% தூள்	—	செடிஉண்ணிகளை அழிக்க.

ஒரு மாதத்திற்கு பின் மீண்டும் ஒரு முறை தூவவும். தெளிப்புக்கு 250 மில்லி லிட்டர் எண்டிரினையும் $\frac{1}{2}$ கிலோ கந்தகத் தூளையும் 40 காலன் நீரில் கலந்து தெளிக்கவும்.

சிவப்புக் கம்பளிப் பூச்சியை ஒழிக்க-அந்துப் பூச்சிகள் இருக்கின்றனவா என்பதைக் கண்டுபிடிக்க விளக்குப் பொறி வைக்கவும். மழை ஆரம்பித்ததும் அந்துப் பூச்சிகள் வெளிவர ஆரம்பிக்கும். அவ்வாறு வந்ததும் மருந்து தெளித்தலை ஆரம்பிக்கவும். எண்டிரின் 0·02 சதவீதம் தெளிப்பு அல்லது பி.எச்.சி. 10 சதவீத மருந்து தூவுதல் செய்யவும். தேவையானால் 10 நாட்களுக்குப்பின் மீண்டும் மருந்து தெளிக்கவும். முடிந்த அளவு முட்டைகள், கூட்டுப் புழுக்கள், அந்துப் பூச்சிகள் ஆகியவற்றைச் சேகரித்து அழிக்கலாம்.

அறுவடை

இலைகள் மஞ்சள் நிறமடைந்து, கடலைக்காயின் உட்புறத் தோல் கறுமை நிறமடைந்ததும் பயிரை அறுவடை செய்யலாம்.

முடிந்தவரை இறவைப் பயிரிலிருந்து கிடைக்கும் கடலையை மானுவாரிப் பயிருக்கு விதையாக உபயோகிக்கக் கூடாது. ஏனெனில் மகசூல் பாதிக்கப்படும். அதை ஈடுகட்ட அதிகமான அளவு விதைகளை உபயோகிக்க வேண்டியிருக்கும்.

வரிசை நடவு பயிரை வளர்க்கும்!

கீழ்பவானி திட்டத்தில் சோளம் சாகுபடி

வி. ஜி. பழனியாண்டி, பி. எஸ்ஸி (விவசாயம்), கண்காணிப்பாளர், சி. டி. அனந்தபத்மநாபன்,
பண்ணை மேலாளர், விவசாய ஆராய்ச்சி நிலையம், பவானி சாகர்.

(ஆடியில் விதைத்த Co 19 சோளம்.)

கீழ்பவானி திட்டத்தின்கீழ் பயிர் செய்யும் விவசாய பெருமக்களே, இறைவை சாகுபடிக்கு மிகவும் உகந்த கோ. 19 தலைவிரிச்சான் சோளரகத்தை ஆடிப்பட்டத்திலேயே விதையுங்கள்.

* இது ஆவணி விதைப்பை விட ஆடி விதைப்பில் மிகவும் அதிக மகசூல் கொடுக்கிறது.

* நாலரை மாதப் பயிர் ; இறைவை சாகுபடிக்கு மிகவும் உகந்தது.

* ஆடி விதைப்பில் நல்ல மகசூல் கொடுக்கிறது. பூச்சிகளால் பாதிக்கப்படுவதில்லை.

* தட்டு மெல்லியதாக இருப்பதால் மாட்டுக்குத் தீவனமாவதோடு நமக்கு நல்ல வெள்ளைச் சோள தானியமும் கிடைக்கிறது.

பவானிசாகர் பண்ணையில் 1963–ம் ஆண்டு இந்த ரகத்தை ஆடியிலும் ஆவணியிலும் விதைத்து இறைவையில் பயிர் செய்து ஆராயப்பட்டது. விதைப்புப் பட்டத்தில் இந்த ஒரு மாத கால தாமதத்தால் விளைச்சல் மிகவும் பாதிக்கப் பட்டது.

ஆடிப்பட்டப் பயிரில் 450 கிலோ தானியமும், 2,000 கிலோ தட்டையும் கிடைத்தது. ஆவணிப் பட்டப் பயிரில் 60 கிலோ தானியமும் 800 கிலோ தட்டையுமே கிடைத்தது. இதனால் ஏக்கருக்கு ரூ. 128 வரை நிகர லாபம் கிடைக்கிறது.

ஆடிப்பட்டத்தில் விதைத்த நிலத்தில் கதிர்கள் அதிகமாகவும் பயிர் உயரமாகவும் வளர்ந்திருந்தது. ஆவணிப் பட்டப் பயிரில் கதிர்கள் நன்றாக மினுங்காமலும் பயிர் வளர்ச்சி குன்றியும் இருந்தது. இதனால் ஆடிப்பட்டப் பயிர் அறுவடைக்கு செலவு அதிகமாகவும் ஆவணிப் பயிர் அறுவடைச் செலவு குறைவாகவும் இருந்தது.

பவானிசாகர் பண்ணையில் கோ, 19 சாகுபடி செய்த விபரம்

நிலத் தயாரிப்பு.—இரும்புக் கலப்பையால் நாலு முறை உழுத பின் ஏக்கருக்கு 10 வண்டி எருவும், 150 ராத்தல் சூப்பர் பாஸ்பேட்டும் போட்டு உழப்பட்டது. ஏக்கருக்கு **15** ராத்தல் கோ. 19 விதை விதைக்கப்பட்டது. நாலாவது வாரத்தில் 'கொத்துக்களை' கொடுத்து பயிர் களைக்கப் பட்டது. பின் ஒரு வாரம் கழித்து ஏக்கருக்கு 150 ராத்தல் வீதம் அமோனியம் சல்பேட்டு போட்டு மண்வெட்டி



ஆவணியில் விதைத்த Co 19 சோளம்.

யால் கொத்தி பயிருக்கு மண் அணைத்து தண்ணீர் பாய்ச்சப்பட்டது. பயிர்களுக்கு மண் அணைக்கப்படுவதினல் ஈரம் காக்கப்படுவதோடு சோளப் பயிர் சாயாமல் நிற்கவும் உதவுகிறது. பவானிசாகர் வட்டாரத்தில் அக்டோபர்–நவம்பர் மாதத்தில் தொடர்ந்தாற்போல் அதிக மழை பெய்கிறது. அதற்குள் ஆடியில் விதைத்த பயிர் நன்ருக வளர்ந்து (18 அடி உயரம்) பூட்டை விடும் தருணத்தில் இருக்கிறது. மழையில் பூட்டைகள் அடிபடாது பூவிட்டு தானியங்கள் பால் பிடித்துக்கொள்கின்றன.

இப்பயிரை நாவாய்ப்பூச்சி நாசம் செய்வதில்லை. காரணம், கோ. 19–ல் பூட்டை விரிந்து பறந்திருப்பதால் மழைநீர் அதில் தங்காமல் விரைவில் வடிந்துவிடுகிறது. பூச்சிகள் தங்கவும் வசதி குறைவு. கோ. 18, கோ. 12 ஆகிய ரகங்களில் சோளப்பூட்டை உருண்டு நெருக்கமாக இருப்பதால் பூச்சிகள் தங்கி பாலை உறிஞ்சிவிடுவதால் பாளையாகிவிட ஏதுவாகிறது. இவைகளைத் தடுக்க ஏக்கராவிற்கு 20 ராத்தல் பி.எச். சி. 10 சதம் தூவவேண்டும். கோ. 19 சோளத்திற்கும், இதே முறையில் பி.எச்.சி 10 சதம் தூவப்பட்டது. கோ. 19 கதிர்கள் விரிந்து வளைந்திருப்பதால் அதன் மீது பறவைகள் உட்கார்ந்து முதிர்ந்த தானியங்களைக் கொத்தித் தின்ன முடியாது.

சாகுபடிச் செலவு—விளைச்சல் விபரம்

	ஆடிப்பட்டம்.	ஆவணிப ட்டம்.
முன் செய் நேர்த்தி ..	17.28	17.28
எருவும், அதன் செலவும்	76.62	76.62
விதையின் கிரயம், அதன் செலவும்.	7.22	7.22
பின் செய் நேர்த்தி ..	30.44	30.18
தண்ணீர் பாய்ச்சுதல் ..	14.50	14.50
அறுவடைக்காகும் செலவு.	15.28	9.68
நோய் தடுப்பு மருந்தும் அதன் செலவும்.	5.66	5.52
	167.00	161.00

விளைச்சல்—ஆடிப்பட்டம்

தானியம் 450 கிலோகிராம் ஒரு கிலோ ரூ. 0.50 வீதம்.	225.00
பயிர் 2,000 கிலோகிராம் ரூ. 3.50 100 கிலோ.	70.00
	295.00

ஆவணி பட்டம்

60 கிலோ—1 கிலோ ரூ. 0.50 வீதம் ..	30.00
800 கிலோ—100 கிலோ ரூ. 3.50 வீதம்	28.00
	58.00

ஆடிப்பட்ட விதைப்பில் கிடைத்த லாபம் ஏக்கராவிற்கு ரூ. 128.

மேலும்கோ. 19 சோளம் ஆவணி பட்டத்தில் விதைப்பதால்

(1) ஆவணி–புரட்டாசியில் விதைத்தால் பயிர் வளர்ச்சி தடைபடுகின்றது.

(2) தக்க சமயத்தில் களை எடுக்க முடிவதில்லை.

(3) ஈரம் அதிகமாக இருப்பதால், உரமிடவோ பயிரைக் கலைத்துவிடவோ முடிவதில்லை. இதனல் பயிர் போதிய வளர்ச்சியில்லாமலேயே பூட்டை விட்டுவிடுகின்றது.

(4) பூட்டை சிறு ராசியாக இருக்கிறது.

(5) மழையில் பூட்டை விடும் பருவம் அகப்பட்டுக் கொள்கிறது. அதனல் நன்ருக விதை பிடிப்பதில்லை.

(6) பூச்சிகளும் விழுகிறது.

எனவே, கீழ்பவானி திட்டத்தின்கீழ் மானவாரி சோளப் பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகள் கோ. 19 சோளத்தை ஆடிப்பட்டத்தில் விதைத்து நல்ல மகசூல் அடையுங்கள்.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

* ஒவ்வொரு விவசாயியும் கிராம நல ஊழியர் உதவி கொண்டு அவரவர் பண்ணைக்கான நவீன சாகுபடித் திட்டத்தைப் பண்ணைத் திட்டமாகத் தயார் செய்தல். இப் பண்ணைத் திட்டத்தில் அவர் கடைப்பிடிக்கும் சாகுபடி முறைகளையும் அதற்கான பொருள் நிதி வசதிகளையும் முதலில் குறித்தல். பின்பு நவீன சாகுபடி முறைகளையும், அதற்குத் தேவைப்படும் பொருள் நிதி தேவைகளையும் குறித்தல். அதற்குப் பின் நவீன சாகுபடிக்காகத் தேவைப்படும் அதிகப்படியான பொருள் நிதி வசதிகளை நிர்ணயித்தல். அவற்றைத் தக்க காலத்தில் தக்க அளவில் பருவத்திற்கு முன்பே கிடைக்க விவசாயக் கூட்டுறவு இலாகாக்கள் மூலம் ஏற்பாடு செய்தல்.
* இம் மாதிரியான பண்ணைத் திட்டங்களை வட்டார அளவில் தொகுத்து வட்டாரத்திற்கான திட்டமும், வட்டாரங்களின் திட்டங்களைத் தொகுத்து மாவட்டத்திற்கான திட்டமும் தயார் செய்தல்.
* நவீன சாகுபடி முறைகளை அந்தந்தப் பகுதி விவசாயிகளுக்கு விளக்குவதற்கு செயல், பலன் நிரூபணங்களை விவசாய இலாகா அலுவலர்களின் மேற்பார்வையில் அமைத்தல்.
* விளைபொருள்களை சேமித்து வைத்து தக்க காலத்தில் நல்ல விலை அடைவதற்கு சேமிப்புக் கிடங்குகள் கட்டுதல்.

இத் திட்டத்தின் துவக்க விழா இம் மாதம் திருநெல்வேலி, மதுரை, கோவை, செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் சிறப்பாக நடத்தப்பட்டு, செயல்பட ஆரம்பித்துள்ளது. எந்த ஒரு திட்டமும் வெற்றி பெற மக்களின் பூரண ஒத்துழைப்பு தேவை. எனவே தீவிர விவசாயப் பகுதித் திட்டமும் வெற்றி பெற விவசாயப் பெருமக்கள் பெரும் ஒத்துழைப்பினை அளித்து, விவசாய உற்பத்திப் பெருக ஆவன செய்ய வேண்டும்.

அதிக மகசூல் பெற மானுவாரி நிலக்கடலைப் பயிருக்கு உரமிடுங்கள்.

(பி. சீனிவாசராவ், எண்ணெ வித்துக்கள் பெருக்க அலுவலர், கோவை.)

மானுவாரி நிலக்கடலைக்கு உரமிடுதல் ஒரு புதிய முறையாகும். சாதாரணமாக குப்பை போன்றவற்றை பயன்படுத்தி வந்த விவசாயிகள் இரசாயன உரங்கள் உபயோகிக்க ஆரம்பித்தது ஒரு புரட்சிகரமான மாறுதலாகும். எவ்வளவோ முயற்சிகளுக்குப் பின் ஏற்படுத்தப்பட்ட இந்த மாறுதல், ஒரு சிலரிடம்தான் காணப்படுகிறது. நிலக்கடலை பருவ மழையால் விளையும் பயிர் என்பதால் மழை தவறிவிடும்போது, எருவிட்டதால் நஷ்டம் இரு மடங்காகும் என்று விவசாயிகள் சாதாரணமாக அஞ்சுகின்றனர். ஆனால் உண்மையில் பார்க்கும்போது சரியாக மழை பெய்யாத காலங்களிலும் இரசாயன உரமிட்ட நிலங்கள் உரமிடாத நிலங்களைவிட அதிக மகசூல் தந்தது.

திண்டிவனம் ஆராய்ச்சிப் பண்ணையில் நடத்தப்பட்ட சோதனைகளில் உரமிடாத பகுதிகளைவிட உரமிட்ட பகுதிகளில் நிலக்கடலை அதிக விளைச்சலைத் தந்தது. இதைத் தவிர தென் ஆற்காடு, சேலம், கோயமுத்தூர், ராமநாதபுரம் ஆகிய இடங்களில்எளிய உரப் பரிசோதனைகள் நடத்தப்பட்டன. தழைச்சத்தும், மணிச்சத்தும், தழைச்சத்தும் சாம்பல்சத்தும், மணிச்சத்தும் சாம்பல்சத்தும், தழைச்சத்தும் மணிச்சத்தும் சாம்பல் சத்துமாகச் சேர்த்தும், 10,000 ராத்தல் தொழுஉரம் போட்டவயல்களில் சோதிக்கப்பட்டன. தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல்சத்து முதலியவை முறையே எக்கருக்கு 10,20, 30 ராத்தல் அளவில் அம்மோனியம் சல்பேட், சூபர்பாஸ்பேட், பொட்டாசியம் மியூரியேட் ஆகஉபயோகிக்கப்பட்டன. சோதனைகளின் முடிவில் தழைச்சத்தும் மணிச்சத்தும் சேர்த்து உபயோகப்படுத்தப்பட்ட பகுதிகள் 12.2 சதவிகித அதிக மகசூலும், தழைச்சத்து மணிச்சத்து சாம்பல்சத்து சேர்த்து உபயோகப்படுத்தப்பட்ட பகுதிகள் 11·1 சதவிகித அதிக மகசூலும் கொடுத்தன.

மேற்கண்ட சோதனைகளின் முடிவுகளிலிருந்து மானுவாரி நிலக்கடலைக்கு எக்கர் ஒன்றுக்கு 10 ராத்தல் தழைச்சத்தும் 20 ராத்தல் மணிச்சத்தும் 30 ராத்தல் சாம்பற்சத்தும் தனி இரசாயன உரங்களாகவோ அல்லது கலப்பு உரங்களாகவோ, உபயோகப்படுத்தலாம் என்று அறியப்பட்டது. இப்போது 4: 8: 12 என்ற சிறப்பு மணிலா கலப்பு உரம், எக்கருக்கு 150 ராத்தல் வீதம் சிபாரிசு செய்யப்படுகிறது. மேலும் நிலக்கடலை பயிர் செய்வதால், ஒரு எக்கர் மண்ணிலிருந்து 100 ராத்தல் தழைச்சத்தும், 24 ராத்தல் மணிச்சத்தும் 30 ராத்தல் சாம்பல் சத்தும் உறிஞ்சப்படுகின்றன என்பதை விவசாயிகள் உணரும்படி செய்யவேண்டும்.

உரமிடப்பட்ட ஒரு எக்கர் நிலத்திலிருந்து 1/20 டன் அதிக மகசூல் கிடைப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது. நிலக்கடலைக்கு உரமிடும் பழக்கத்துக்கு விவசாயிகள் மெதுவாக பழக்கப்படுத்தப்பட்டு வருகின்றனர். 1963-64ஆம் ஆண்டின் 1,30,000 எக்கர் குறியீட்டுக்கு 1,54,891 எக்கர்கள் உரமிடப்பட்டதும், 1964-65-ஆம் ஆண்டில் 3,95,000 எக்கர் குறியீட்டுக்கு 3,01,653 எக்கர்கள் உரமிடப்பட்டதும் நல்ல முன்னேற்றமாகும்.

கடலூர் தீவிர உற்பத்தித் திட்டம் பகுதியில் 1963-64 ஆம் ஆண்டில் நிலக்கடலையில் நடத்தப்பட்ட பயிர் அறுவடை சோதனைகளின் முடிவுகள், சராசரி 309 ராத்தல் அல்லது 37.7 சதவிகித கூடுதல் விளைச்சல் ஒரு எக்கரில் கண்டதாக அறிவிக்கின்றன. மானுவாரி நிலக்கடலைக்கு உரமிடுதல் அதிக மகசூல் தரும் என்ற நம்பிக்கையில் ஒவ்வொருவரும் இம்முறையைப் பின்பற்றி விளைவைப் பெருக்கவேண்டும்.

வீரிய ரகச்சோளம் சி. எஸ். எச். 1.

(சிறுதானிய நிபுணர், கோவை.)

கோயமுத்தூர் சிறுதானிய விருத்தியல் நிலையத்தில் சி. கே. 60எ. IS-84 என்ற இருவகைகளை ஒருங்கிணைத்து சி.எஸ். எச். 1, என்ற வீரிய ரகச் சோளம் விருத்தி செய்யப்பட்டுள்ளது. சி, எஸ். எச். 1 வீரிய சோளம் கோயமுத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம், மதுரை ஆகிய மாவட்டங்களில் தற்போது சாகுபடியில் உள்ள கோ. 18 ரகத்துடன் ஒப்பிட்டு சோதனை செய்யப்பட்டபோது 61 சதவிகிதம் அதிக விளைச்சலைத் தந்துள்ளது. 90 நாள் கால அளவுடைய இந்த ரகம், சாயாத தன்மை கொண்டது. அதிக சோகைகளுடன் கூடிய தட்டை ருசி நிறைந்த தீவனமாகவும் உபயோகப்படும். நல்ல சுவையுடன் கூடிய பெரிய மணிகளைக் கொண்டது. இந்த ரகம் கோடை கால இறவைப் பயிர் சாகுபடிக்கு ஏற்றது.

இந்த ரகத்திற்கு அதிக உரமிட வேண்டும். எக்கருக்கு 10 டன்கள் தொழு உரமிட்டு, 60 ராத்தல் தழைச்சத்தும் 30 ராத்தல் மணிச்சத்தும் மேற்கொண்டு இரசாயன உரங்கள் மூலம் தரவேண்டும்.

இந்த வீரிய ரகத்தை எல்லா இடங்களிலும் பரப்ப வேண்டி, விதைப்பெருக்கம் செய்யப்படுகின்றது. இது வீரிய ரகம் என்பதால், ஒவ்வொரு முறை விதைக்கும் போதும் புதிய விதைகளை விவசாயத்துறை அலுவலர்களிடமிருந்து பெற்று உபயோகிக்க வேண்டும்.

'அக்மார்க்' பொருள்கள் தரத்தில் சிறந்தவை!

'மாருத்' சார்ஜ் பம்ப்பும் ஸ்ப்ரேயரும்

கோயமுத்தூர் விவசாய பாதுகாப்பு நிலையத்தினல் அங்கீகரிக்கப்பட்டதும்
சென்னை விவசாய டைரக்டரால் ஏற்றுக்கொண்டதும்.
(No. C-1, 40404/64—21-4-64.)



குணங்கள் :

சராசரி அழுத்தத்தில் வேலை செய்யத் தகுதியான ஆப்பரேட்டரில் ப்ரெஷர் ரெகுலேட்டர் அமைந்துள்ளன.

2. ஒழுகுவதைத் தடுக்க ஸ்ப்ரே லாண்ட்ஸில் கைவிரல்களால் கட்டுப்படுத்த ஸ்ப்ரேயர் அமைந்துள்ளன.
3. ஸ்ப்ரேயர் எஃகு தட்டினல் செய்யப்பட்டவை.
4. ஸ்ப்ரேயரின் மேல் தொட்டியில் பாதுகாப்பு வால்வு அமைக்கப்பட்டுள்ளன. டெலிவரி குழாய் 1·5 மீட்டர் நீளம் உள்ளன.
5. 61 c. m. எக்ஸ்டென்ஷன் ஒரு பக்கம் வாத்து கழுத்து போன்ற வளைந்த ராடும் ஸ்ப்ரே நாஸிலும் சேர்ந்தவை.



மாருத் சார்ஜ் பம்ப்
ரூ. 280

'மாருத்'
நீடித்த அழுத்த சக்தியோடு முதுகில் சுமந்து செல்லக் கூடிய ஸ்ப்ரேயர்.

18 லிட்டர் அளவு கொண்டது:
ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்
ரூ. 290
பித்தளையினல் செய்யப்பட்டது
ரூ. 230

14 லிட்டர் அளவு கொண்டது:
ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்
ரூ. 280
பித்தளையினல் செய்யப்பட்டது
ரூ. 230



தயாரிப்பாளர்கள் :

அமெரிக்கன் ஸ்பிரிங் அண்டு பிரஸ்ஸிங் ஒர்க்ஸ் பிரைவேட் லிமிடெட்,
மலாட், பம்பாய்-64.

சென்னை, மைசூர் விநியோகஸ்தர்கள் :

S. V. ரங்கஸ்வாமி அண்டு கம்பெனி பிரைவேட் லிமிடெட்,
தபால் பெட்டி எண். 539
75, கலாசிபாளையம் நியூ எக்ஸ்டென்ஷன், பெங்களூர்-2.

சென்னை மாநில வர்த்தக பயிர்களின் 1965-ம் ஆண்டு "ஏப்ரல்" திங்கள் விற்பனை நிலைமைப் பற்றிய விவரம்

வர்த்தக நிலைமை

சென்னை மாநிலத்திலுள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு வந்த பருத்தி லின்ட விவரங்களாவன :—

(எடையளவு : குவிண்டலில்)

வரிசை எண். (1)	விற்பனைக் கூடத்தின் பெயர். (2)	ஆரம்ப இருப்பு. (3)	விற்பனைக்கு வந்தவை. (4)	விற்பனையானவை. (5)	இறுதி இருப்பு. (6)
	கம்போடியா கப்பாஸ்—				
1.	பொள்ளாச்சி	4,000	..	..	..
2.	திருப்பூர்	18,052	1,38,970	1,12,136	44,886
3.	தாராபுரம்	200	5,500	3,500	2,200
4.	பெருந்துறை	2,250	21,600	21,000	2,850
5.	சென்னிமலை	1,600	2,000	2,400	1,200
6.	கோயமுத்தூர்	5,350	..	..	5,350
7.	புஞ்சை புளியம்பட்டி	500	320	320	500
8.	அன்னூர்	2,300	2,550	750	4,100
9.	பல்லடம்	..	8,200	5,100	3,100
(ஆ)	**கருங்கண்ணி கப்பாஸ்—**				
1.	திருப்பூர்	..	6,424	6,424	..
2.	உடுமலை	..	..	..	..
3.	சூலூர்	200	..	200	..
	கம்போடியா லின்ட்—				
1.	பொள்ளாச்சி	740	..	..	740
2.	திருப்பூர்	19,551	16,898	11,904	24,545
3.	உடுமலை	..	..	..	..
4.	சூலூர்	180	..	180	..
5.	கோபி	45	65	70	40
6.	ஈரோடு	2,000	4,200	4,500	1,700
7.	பெருந்துறை	..	940	860	80
8.	சென்னிமலை	1,000	2,500	2,700	800
9.	கோயமுத்தூர்	3,750	..	..	3,750
10.	பவானி	20	20	30	10
11.	பல்லடம்	..	1,300	200	1,100
	இராமநாதபுரம் மார்க்கெட் கமிட்டி				
	கருங்கண்ணி பருத்தி—				
1.	விருதுநகர்	..	20,000	15,000	5,000
2.	சாத்தூர்	..	10,000	10,000	...
3.	இராசபாளையம்	..	8,000	8,000	..
	உகண்டா பருத்தி—				
	இராசபாளையம்	30,000	..	..	30,000
	கருங்கண்ணி பஞ்சு.—				
1.	விருதுநகர்	1,080	4,200	4,000	1,290
2.	சாத்தூர்	..	2,800	2,500	300
3.	இராஜபாளையம்	..	2,240	2,000	240

நிலவளம் பெருக்க பசுந்தழை இடுவீர்!

வரிசை எண்.	விற்பனைக்கூடத்தின் பெயர்.	ஆரம்ப இருப்பு.	வரவு.	விற்பனை.	இறுதி இருப்பு.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
	இராமநாதபுரம் மார்க்கெட் கமிட்டி—தொடர்ச்சி.				
	உகண்டா பஞ்சு—				
	இராசபாளையம்	5,000	..	..	5,000

வர்த்தக நிலைமை

பொதுவாக எல்லா மார்க்கெட்டிலும் சரக்குகள் குறைந்தும், விலைகள் சரக்கின் தரத்தை அனுசரித்தே காணப்பட்டது. உகண்டா ரகங்களில் இம்மாதம் வியாபாரம் நடைபெறவில்லை.

விருதுநகர் விற்பனைக் கூடத்தில் பருத்தி விதையின் விலைப் பட்டியலாவன—

வரிசை. எண்.	வகை.	கருங்கண்ணி.	உகந்தா.
(1)	(2)	(3)	(4)
1.	முதல்	43·00	..
2.	இரண்டாம் ரகம் ..	42·00	..

விலைப்போக்கு :

மார்க்கெட்டில் வரவுகள் குறைவாலும் பருத்தியின் தரத்துக்கு தகுந்தாற்போல் விலைகள் காணப்படுகிறது.

சென்னை மாவட்டத்தில் சில முக்கிய சந்தைகளின் இம்மாத பருத்தி, பஞ்சு விலைப்பட்டியல்

விலைகள் குவிண்டலுக்கு ரூ. பை.

வரிசை எண்.	விற்பனைக் கூடத்தின் பெயர்.	கருங்கண்ணி		கம்போடியா		உகண்டா	
		பருத்தி.	பஞ்சு.	பருத்தி.	பஞ்சு.	பருத்தி.	பஞ்சு.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
1.	திருப்பூர் ..	125	..	155	386		..
2.	கோயமுத்தூர் ..	..	..	..	..	..	..
3.	பொள்ளாச்சி ..	..	..	..	..	..	..
4.	கோபி ..		..	140	400	.	..
5.	பவானி ..	..	..	120	380	..	..
6.	ஈரோடு ..	..	..	150	400	..	..
7.	பெருந்துறை ..	..	..	130	365	..	..
8.	தாராபுரம் ..	..	..	132	370	..	..
9.	வெள்ளக்கோவில் ..	..	..	..	..	..	..
10.	அன்னூர் ..	..	..	130	..	..	..
11.	புஞ்சைபுளியம்பட்டி ..	..	..	145	..	..	..
	இராமநாதபுரம் மாவட்டம்—						
1.	விருதுநகர்	120—124	367	..	..	..	..
2.	சாத்தூர்	110—116	310—327	..	..	..	..
3.	இராஜபாளையம்	104—115	..	..	..	..	..

விலைப்போக்கு :

வாங்குபவர்கள் குறைவால், பருத்தி, பஞ்சு மார்க்கெட் மந்த நிலையில் உள்ளது.

வேர்க்கடலை

வரிசை எண்.	விற்பனைக் கூடத்தின் பெயர்.	ஆரம்ப இருப்பு	விற்பனைக்கு வந்தவை.	விற்பனையானவை.	இறுதி இருப்பு.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
I	**முழுக்கடலை—**				
1.	வட ஆற்காடு	6,050	17,800	19,500	4,350
2.	திருச்சி	..	..	..	.
3.	கோவை	3,450	4,460	4,500	3,410
4.	இராமநாதபுரம்	..	1,000	1,000	..

தானியச் சேமிப்புக்கு தகுந்த மருந்தடியுங்கள் !

வரிசை எண்.	விற்பனைக் கூடத்தின் பெயர்.	ஆரம்ப இருப்பு.	விற்பனைக்கு வந்தவை.	விற்பனையானவை.	இறுதி இருப்பு.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
II	மணிலா பயிர்—				
1.	தென்னாற்காடு	20,638	84,439	60,256	44,821
2.	திருச்சி	2,291·80	16,737·36	16,094·66	2,034·50
3.	வட ஆற்காடு	9,600	9,500	12,500	6,600
4.	கோவை	800	8,300	730	900
5.	இராமநாதபுரம்	2,300	3,500	4,000	2,300

வர்த்தக நிலைமை:

இம்மாதம் அநேக இடங்களில் மழை சிறிதளவு பெய்துள்ளது. இதனால் கோடை கால பயிர் அறுவடை செய்யப்பட்டு வரத்து வந்துக்கொண்டுள்ளது. புதிய மணிலா வரத்தின் காரணமாக விலையும் குறைந்துள்ளது.

சென்னை மாநிலத்தில் சில விற்பனைக் கூடங்களில் வேர்கடலை, பருப்பு, எண்ணெய் பிண்ணாக்கு முதலியவை களின் எப்ரல் மாத விலைப்பட்டியல்.

வரிசை எண்.	விவரங்கள்.	தென்னாற்காடு.	வட ஆற்காடு.	கோவை.	திருச்சி.	இராமநாதபுரம்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1.	முழுக்கடலை	..	24—33·50	..	..	..
2.	பருப்பு	75·80மு92·30	83—97	88மு125	120மு130·40	93—98
3.	எண்ணெய்	..	..	..	..	513—522
4.	பிண்ணாக்கு	..	..	.	..	102மு120 (226·80 kg)

விலை விவரம்—

மணிலா பயிரின் விலை எல்லா மாவட்டங்களிலும் ஸ்திரமாக உள்ளது.

எள்.—சென்னை மாநிலத்தில் "எப்ரல்" மாத எள் கொள்முதல் விற்பனை விவரம்—

வரிசை எண்.	மாவட்டம்.	ஆரம்ப இருப்பு.	விற்பனைக்கு வந்தவை.	விற்பனையானவை.	இறுதி இருப்பு.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1.	தென் ஆற்காடு	1,071	2,348	2,478	941
2.	வட ஆற்காடு	..	..	..	..
3.	திருச்சி	76·50	1,696·27	1,535	237·82

புகையிலை—

வரிசை எண்.	இடத்தின் பெயர்.	ஆரம்ப இருப்பு.	விற்பனைக்கு வந்தவை.	விற்பனையானவை.	இறுதி இருப்பு.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1.	கோப்பனூர் புதூர்	1,400	..	..	1,400
2.	பொள்ளாச்சி	110	..	..	110
3.	கோபி	800	400	200	1,000
4.	உடுமலை	..	..	..	..
5.	புஞ்சை புளியம்பட்டி	1,000	2,000	1,000	2,000
6.	பவானி	700	300	400	600
7.	ஈரோடு	1,000	850	1,150	700
8.	கொடுமுடி	270	200	280	190
9.	சித்தோடு	680	500	700	480
10.	காரமடை & மேட்டுப்பாளையம் ..	1,100	500	250	1,350
11.	பல்லடம	8,303	4,000	6,803	5,500

பயிர் மாற்றம் பண்ணைக்குச் சிறந்தது !

வரிசை எண். (1)	இடத்தின் பெயர். (2)	ஆரம்ப இருப்பு. (3)	விற்பனைக்கு வந்தவை. (4)	விற்பனையானவை. (5)	இறுதி இருப்பு. (6)
12.	கோயம்புத்தூர்	850	..	..	850
13.	தாராபுரம்	2,650	1,500	220	3,930
14.	பெருந்துறை	19	15	17	17
		18,882	10,265	11,020	18,127

விற்பனைக் கூடத்தின் பெயர். (1)	முதல் தரம். (2)	இரண்டாம் தரம். (3)	மூன்றும் தரம். (4)
வாய் புகையிலை, மீனம்பாளையம்—			
கோயம்புத்தூர்	..	..	..
கோபி	300	250	120
ஜாப்னு—			
பல்லடம்	440	300	120
பொள்ளாச்சி	..	..	..
ஈரோடு	225	182	145
கோயம்பத்தூர்	..	..	..
சுருட்டுப் புகையிலை—			
ஈரோடு	200	180	130
பவானி	300	250	120
குழிப் புகையிலை—			
பல்லடம்	200	130	85

விலைப் போக்கு— புகையிலை மார்க்கெட் தொடர்ந்து மந்தம். நீலகிரி, சேலம், திருச்சி, மதுரை மாவட்டங்களுக்கும், கேரள ராஜ்ஜியத்திற்கும் ஏற்றுமதி இருந்தது.



"ஆஸ்பி போலோ"

முதன் முதலாக இந்தியாவில் தயாரிக்கப்பட்ட "ஆஸ்பி போலோ" யந்திரம், சிக்கனமாகவும், சக்தி வாய்ந்ததாகவும், துரிதமாகவும் உபயோகித்து பயிர் பூச்சிகளையும், பயிர் நோய்களையும் கட்டுப்படுத்தக்கூடியது.

மோட்டாரினுல் இயங்கும் முதுகில் சுமந்து செல்லக் கூடிய பனி தெளிப்பு குழலுடன்கூடிய டஸ்டர்.

மூன்று குதிரை சக்தி கொண்ட, நிமிஷத்துக்கு 6,000 சுழற்சியுடைய விசையினுல் இயங்கக்கூடிய, ஜெர்மனியில் தயாரிக்கப்பட்ட சோலோ யந்திரத்துடன் கூடியது.

வெகு சுலபமாக பனி தெளிப்பு குழலை டஸ்டராகவும் மாற்றிக்கொள்ளக்கூடியது.

தயாரிப்பாளர்கள் :

அமெரிக்கன் ஸ்பிரிங் அண்டு பிரஸிங் ஒர்க்ஸ் (பிரைவேட்) லிமிடெட்
மாலாடு, பம்பாய்–64.

சென்னை, மைசூர் விநியோகஸ்தர்கள் :

S. V. ரங்கஸ்வாமி அண்டு கம்பெனி (பிரைவேட்) லிமிடெட்
75, கலாசிபாளையம் நியூ எக்ஸ்டென்ஷன்,
த. பெ. எண் 539, பெங்களூர்–2.

காய்கறி உற்பத்தியில் முன்னேற்றம்.

எஸ். காதர் மொஹிதீன், வேளாண்மை விளக்குநர் (காய்கறி அபிவிருத்தி), உசிலம்பட்டி.

சென்னை மாகாண சர்க்கார் 1963-ம் வருடத்திலிருந்து காய்கறி அபிவிருத்தித் திட்டத்தை அமுல் நடத்தி வருவது யாவரும் அறிந்ததே. இந்தத் திட்டம் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, திருநெல்வேலி ஆகிய நகரங்களைச் சுற்றி 30 மைல் சுற்றளவில் நடைமுறையில் உள்ளது.

முட்டைக் கோஸ் பச்சைப் புழுக்களை கைகளால் நசுக்கி அழித்தல்.

மதுரை நகரின் சுற்றளவில் அமைந்துள்ள உசிலம்பட்டி காய்கறி அபிவிருத்தியில் சிறந்து விளங்குகிறது. இந்த காய்கறி அபிவிருத்தித் திட்டம் உசிலம்பட்டி வட்டாரம் உட்பட 4 வட்டாரங்களில் செயல்படுகிறது. பெரியகுளம் தாலுகா ஆண்டிபட்டியும் சேர்க்கப்பட்டுள்ளது.

முக்கியமாக தக்காளி உற்பத்தியில் இப்பகுதிகள் சிறந்து விளங்குகிறது எனச் சொல்லலாம். இங்கிருந்து சென்னை, மதுரை, திருச்சி, தஞ்சாவூர் திண்டுக்கல் ஆகிய இடங்களுக்கு தக்காளி ஏற்றுமதி செய்யப்படுகின்றது. சென்னைக்கு நேரடியாகவே அனுப்பப்படுகின்றது. உச்சமான உற்பத்தி காலத்தில் தினமும் 1,500 முதல் 2,000 கூடைகள் (8 கிலோ கொண்டவை) ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்த அபிவிருத்தித் திட்டம் இப்பகுதி காய்கறி உற்பத்தியாளர்களுக்கு எவ்வகையில் உதவுகிறது என்பதை சிறிது கவனிப்போம்.

காய்கறி சாகுபடிக்குக் கடன்மூலம் அளிக்கப்படும் சாதனங்கள்

ஒரு ஏக்கர் சாகுபடிக்கு ரூ. 120 கடனுக வழங்கப்படுகிறது. அதாவது சாகுபடிச் செலவுக்காக ரூ. 70 ரொக்கமாகவும், ரூ. 40 பிரத்தியேக (ஸ்பெஷல்) காய்கறிக் கலப்பு உரமாகவும், ரூ. 5 விதையாகவும், ரூ. 5 பூச்சி பூசண மருந்தாகவும் விநியோகிக்கப்படுகின்றது. விதையும் மருந்தும் பாதி விலையில் கொடுக்கப்படுகின்றன. ஒரு நபருக்கு அதிகபட்சம் ரூ. 240 வரை இரண்டு ஏக்கர்களுக்குக் கொடுக்கப்படும். குறைந்த வட்டியுடன் திருப்பிச் செலுத்தப்படும் காலம் 6 மாதம் முதல் 12 மாதம் வரையாகும். விதைகளைப் பொறுத்தமட்டில் எந்த வகையான காய்கறிகள் அவற்றின் குண விசேஷங்களுக்காக அவ்விடங்களில் பிரபல்யமாக இருக்கின்றதோ அவ்விதைகள் குறிப்பாக விநியோகிக்கப்படுகின்றன. உசிலம்பட்டி வட்டாரத்தில் 'கனூர் பச்சை' என்னும் தக்காளி, அவற்றின் ருசி, சதைப் பிடிப்பு, சுமார் 7 நாட்களுக்குக் கெடாமலிருக்கும் குணங்கள் கொண்டதால் அதன் விதைகள் கொடுக்கப்படுகின்றன. அதே மாதிரி கத்தரி விதைகளும் விநியோகம் செய்யப்படுகின்றன.

தேவையான பூச்சி பூசன மருந்துகள் பாதி விலையில் கொடுக்கப்படுகின்றன. திட்டத்திற்கென தயாரிக்கப்பட்ட பிரத்தியேக (ஸ்பெஷல்) காய்கறிக் கலப்பு உரம் (என்.பி.கே. 6:12:12) கொடுக்கப்படுகின்றது.

இயற்கை உரமும், செயற்கை உரமும் அதன் பலன்களும்

ஆண்டிபட்டி, வரிசை நாட்டு மலைகளின் தொடர்பாக உள்ள மலைகளையொட்டி இப்பகுதியில் பெரும்பான்மையான கிராமங்கள் இருக்கின்றன. மழை காலத்தில் இம் மலைகளிலிருந்து கரைந்து வரும் தாவர உணவுச் சத்துக்கள் நிறைந்த வண்டல் மண் ஆறுகளிலும் குளங்களிலும் தேங்கியிருப்பதை தோட்டங்களுக்கு இடுகின்றனர். அத்துடன், ஸ்பெஷல் காய்கறிக் கலப்பு உரம் ஏக்கருக்கு சுமார் 90 கிலோ இட்டு மகசூலை கணிசமாக அதிகரிக்கின்றனர். அதாவது 50 சதவீதம் முதல் 80 சதவீதம் மகசூல் கூடுதலாக்கப்படுகிறது.

முட்டைக் கோஸ் சாகுபடிக்கு சிறப்பு காய்கறிக் கலப்பு உரமிடுதல்.

செடிக்கு வேண்டிய சத்துக்கள் பூரண அளவில் கிடைப்பதால் செடிகள் நல்ல வளர்ச்சி பெறுவதுடன் பழங்கள் பெரியதாகவும், சதைப் பிடிப்புள்ளதாகவும், ருசியாகவும் இருப்பதுடன், பழமழுகல், செடிவாடல் முதலிய நோய்களினின்றும் தன்னைப் பாதுகாத்துக்

கொண்டு அதிக மகசூல் கொடுக்க ஏதுவாகிறது. ஏற்கனவே சுமார் 7 நாட்களுக்குக் கெட்டுப் போகாத தன்மையுடைய மேற்படி தக்காளிப் பழங்கள் உரச் சத்துக்களின் குணத்தால் மேலும் சில தினங்களுக்கு கெட்டுப்போகாத தன்மையடைகிறது.

இந்த உரங்களை கத்தரி, முட்டைக்கோஸ் சாகுபடிகளுக்கும் உபயோகித்து பலனடைகின்றனர். கத்தரி சில பகுதிகளில் மட்டும் நஞ்சைகளில் பயிரிடுகின்றனர். மற்றவை தோட்ட சாகுபடியே.

பயிர்ப் பாதுகாப்பு

பூச்சி மருந்துகள், பாதிக் கிரயத்தில் கடனுதவி பெறுபவர்களுக்கு, கடன் வழங்கும்போதே கொடுக்கப்படுகின்றன. மருந்து கைவசமிருப்பதால், விவசாயி பயிரில் பூச்சி விழுந்தால் உடனடியாகக் கட்டுப்படுத்தலாம் என்ற திடநம்பிக்கையோடு இருக்கிறார். மேலும், மருந்து வாங்க அவர் எடுத்துக் கொள்ளும் அவகாச நாட்களில் பூச்சிகளால் செடிகளும் பழங்களும் மேலும் நாசமடைகின்றன. தன்னிடம் மருந்துகள் இருப்பதால் உடனடியாக உபயோகிக்க சாதாரண விவசாயியும் ஒரு ஆர்வம் பெறுகிறார். ஆகவே இவ்வாறு உடனே நோய்களையும், பூச்சிகளையும் ஒழிப்பதால் விவசாயி கடந்த 3, 4 மாதங்களில் ஊக்கத்துடன் பாடுபட்டு உருவாக்கிய செடிகளையும் காய்களையும் பாதுகாத்து அவற்றின் மூலம் அதிக மகசூல் அடைய வழி செய்துக் கொள்கிறார்.

முட்டைக் கோஸ் பச்சைப் புழுக்களை அழிக்க மருந்து தெளித்தல்.

இங்கு முட்டைக்கோஸில் விழும் பச்சை புழுக்களை கூலி ஆட்கள் அமர்த்தி கைகளால் நசுக்கிக் கொல்வது அதிக வழக்கத்திலிருந்தது. பூச்சி மருந்து தெளிப்பதன்மூலம் தான் புழுக்களை முற்றிலும் அழிக்கமுடியுமென்றும், செலவும் குறையுமென்றும் எடுத்துச் சொன்னதன்பேரில் இப்பொழுது மருந்து தெளிக்கும் பழக்கத்தை அதிகமாகக் கையாளுகிறார்கள்.

இவ்விதம் திட்டம் வெற்றிகரமாக செயல்படுவதில் விவசாயிகள் ஒத்துழைத்து அதன் பலன்களை அனுபவித்தும் வருகின்றனர். கடந்த 3 வருடங்களில் ரூ. 92,000 வரை கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. கணிசமாக காய்கறி மகசூலும் அதிகமானதுடன் அதிக விஸ்தீரணங்களில் காய்கறி சாகுபடிகளை விரும்பி செய்துள்ளனர். அதிகமான விஸ்தீரணம் (ஏக்கரில்) பின் வருமாறு :—

	பசலி வருடங்கள்.		
	1371	1372	1373
உசிலம்பட்டி	572	580	813
திருமங்கலம்	161	191	189
செல்லம்பட்டு	52	52	117
ஆண்டிபட்டி	..	60	285

மேற்கண்ட விபரங்களிலிருந்து காய்கறி அபிவிருத்தித் திட்டம் எவ்வாறு சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறது என்று நாம் அறியலாம்.

சகல வைட்டமின்கள் நிறைந்ததாகவும், சுலபமாகவும், சகாயமாகவும் கிடைக்கக்கூடிய பொருள் காய்கறிகள் தான் என்று கூறத் தேவையில்லை. ஆகையால் அதிகமாக எந்நாளும் தேவைப்படும் பொருளான காய்கறிகள் சாகுபடியில் நமது சர்க்காரின் அபிவிருத்தித் திட்டத்தை விவசாயிகள் யாவரும் பூரணமாகப் பயன்படுத்தி அதிக அளவில் லாபமடைய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

அதிக மகசூலால் அதிக வருவாய் பெறும்
பெரிய தோட்டக்காரர்கள்
சிறந்த ஜாதி காய்கறி விதைகள் பெறுமிடம் :

ராஜா பண்ணைத் தோட்டம்

இக்காலத்துக்குத் தகுதியான
நோய் அணுகா, அதிக மகசூல் தரும் கவர்ச்சிகர ஜாதி
வெண்டை

மிகப் பெரிய நீண்ட, சதை பருத்த ருசி மிகுந்த அதிசய ஜாதி
கொத்தவரை

ருசி மிகுந்த, கவர்ச்சிகரமான 14 வித புகழ் பெற்ற
கத்திரி

புகழ் பெற்ற பெரிய ரோஜா உருண்டை பல்லாரி
வெங்காயம்

இதர பலவித உயர்ந்த கோடை மிளகாய், முள்ளங்கி ஜாதிகள், பரங்கி, பூசணி, வெள்ளரி முதலான காய்கறி விதைகள், பழச் செடிகள், தென்னங் கன்றுகள், களை நாசினிகள்

கிடைக்குமிடம் :—

ராஜா பண்ணைத் தோட்டம்

3, வைத்தியராமய்யர் தெரு, தி. நகர்
(இந்தி பிரசார சபா அருகில்), சென்னை-17.
தந்தி : RAJSEED   போன் : 42262

வானொலிச் செய்திகள்.

அன்புள்ள விவசாயப் பெருமக்களே,

நீங்களெல்லாரும், உங்களுக்கென ஒலி பரப்பப்படும் 'கிராம நிகழ்ச்சிகளையும், குறிப்பாக 'கிராம வானொலி மன்ற' நிகழ்ச்சிகளையும் மாலைதோறும் கேட்கிறீர்கள் என நம்புகிறேன். கிராம வானொலி மன்ற நிகழ்ச்சிகளைக் கேட்கும்போது, உங்களுக்கு ஏற்படும் விவசாய சம்பந்தப் பட்ட சந்தேகங்களுக்கு விளக்கம் பெற உங்கள் கேள்விகளை உங்கள் மன்றத்தின் பெயர் குறிப்பிட்டு, 'திருச்சி வானொலி' நிலையத்துக்கு அனுப்பி, ஏற்ற விடையை வானொலி மூலமாகவே பெற்றுக்கொள்ளலாம். ஆகவே ஒவ்வொரு வெள்ளிக்கிழமை மாலையும் 6-40 முதல் 7-15 மணி வரை நிகழ்ச்சிகளை கேட்பதோடு நில்லாமல், கேட்டவைகளை நடைமுறையில் செய்து பலன்பெற்று, உங்கள் அனுபவங்களை எனக்கு எழுதினால், இதர விவசாயிகளும் அதைப் படித்து பயன்பெற முடியும்.

சமீபத்தில 26—4—1965 முதல் 5—5—1965 வரை 'தேசீய விவசாயச்செய்திக் கருத்தரங்கு' சிம்லாவில் நடைபெற்றது. இக் கருத்தரங்கில் விவசாயச் செய்தி அலுவலர்களும், வானொலி அலுவலர்களும் இந்தியாவின் எல்லா மாநிலங்களிலிருந்தும் வந்து பங்குகொண்டனர். இக் கருத்தரங்கில், பொருட்காட்சிகள் மூலமாகவும், வானொலி மூலமாகவும் எவ்வாறு விவசாயச் செய்திகளை உங்களுக்கு சிறந்த முறையில, ஏற்ற காலத்தில் அளிக்க முடியும் என்பது பற்றி விவாதிக்கப்பட்டது. இதர நாடுகளில் குறிப்பாக கனடா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளில், வானொலியை மிகவும் திறம்பட விவசாயிகள் உபயோகிக்கிறார்கள். அதுபோல் நம் நாட்டிலும் எவ்வாறு நடைமுறையில் உபயோகிக்கலாம் என்பது பற்றி ஆராயப்பட்டது. இப்போது சுமார் 30 வானொலி நிலையங்கள் தான் நம் நாட்டில் இருக்கின்றன. தமிழ் நாட்டில் திருச்சியிலும் சென்னையிலும் வானொலி நிலையங்களும், அஞ்சல் செய்யக்கூடிய நிலையம் ஒன்று திருநெல்வேலியிலும் உள்ளன. விரைவில் தீவிர சாகுபடிக்கென மேலும் சில வானொலி நிலையங்கள் அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏற்படுத்தப்படலாம். அதுமட்டுமின்றி, தற்காலத்தில் எளிதாக எங்கும் எடுத்துச் செல்லக்கூடிய டிரான்சிஸ்டர் பெட்டிகளையும் விவசாயிகளுக்கு விநியோகிக்க ஏற்பாடுகள் செய்யப்படலாம். ஆனால் இவைகள் கிடைக்க சிறிது காலதாமதமாகும். மேற்கூறிய திட்டம் அமுலுக்கு வருவதற்குள், விவசாயப் பெருமக்கள் யாவரும் கிராம நிகழ்ச்சிகளை மாலைதோறும் தவறாமல் கேட்கும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொண்டால் தான், திட்டத்தின் குறிக்கோள் நிறைவு பெற்று நீங்கள் முழுப்பயனடைய முடியும். எனவே, இன்று முதல் உங்கள் கிராமத்தில் இயங்கிவரும் 'பஞ்சாயத்து வானொலிப் பெட்டி' மூலம் கிராம நிகழ்ச்சிகளை ஒழுங்காக கேட்கத் தவறாதீர்கள்.

விவசாய இலாக்காவின் ஆலோசனைகளை கடைபிடித்து நவீன சாகுபடி செய்கிற அநேக விவசாயிகள் உங்களிடையே உண்டு. அவ்வாறு திருந்திய சாகுபடி முறைகளைக் கடைபிடித்து உயர்ந்த பலனையும் விளைச்சலையும் நீங்கள் அனுபவத்தில் பெற்றிருப்பதை எனக்கு எழுதினால், நான் உங்களுடன் தொடர்பு கொண்டு, உங்களை பேட்டி கண்டு பிறருக்கும் அதை ஒலிபரப்பி ஊக்குவிக்க முடியும் என நம்புகிறேன்.

இப்படிக்கு,
உங்கள் நலனைக் கருதும்,
அ. ஜான் நைட்,
வானொலி விவசாய அலுவலர்,
36-B, மௌண்ட்ரோடு, சென்னை-2.

சென்ற மாதத்தில் நீங்கள்கேட்ட நிகழ்ச்சிகளில் நினைவில் கொள்ள வேண்டியவை !

ஆகஸ்ட்-செப்டம்பரில் அறுவடை செய்யும் திராட்சைக்கு மே-ஜூனில் கவாத்து செய்தல்.

தமிழ்நாட்டில் மதுரை, சேலம், கோயமுத்தூர் ஆகிய மாவட்டங்களில் சுமார் 3500 ஏக்கராவில் பச்சை திராட்சை, பெங்களூர் நீலம், பிளாக் பிரின்ஸ், விதையில்லா திராட்சை, பன்னீர் திராட்சை, அனுப்-இ-ஷாஹி போன்ற திராட்சை வகைகள் பயிர் செய்யப்படுகின்றன. திராட்சைக்கொடி நன்றாக காய்ப்பதற்கு கவாத்து செய்தல் இன்றியமையாததாகும். கவாத்து செய்தல் என்பது திராட்சை செடியில் வேண்டப்படாத உபரியான பகுதிகளை வெட்டிவிடுவதாகும். ஒழுங்கில்லாமல் வளர்ந்திருக்கும் கொடிகளை வெட்டிவிடுவதால் புது தளிர் வளர்ந்து, பூத்து, இலைகள் உண்டாவதோடு, எருவிடுதல், களையெடுத்தல், மருந்தடித்தல் போன்ற வேலைகளை இடையூறின்றி செய்யவும் முடிகிறது. திராட்சைக் கொடி நட்ட ஒன்று அல்லது ஒன்றரை வருடத்துக்குப் பின் முதன் முறை கவாத்து செய்யப்படுகிறது.

திராட்சை ரகத்தின் காய்க்கும் தன்மையைப் பொறுத்து சில கணுக்கள் விட்டு தண்டுகள் பிளக்காமலும், பிசிறில்லாமலும் 'சிகேச்சர்' எனப்படும் கத்தரிக்கோலைக் கொண்டு கவாத்து செய்தல் வேண்டும். சாதாரணமாக பச்சை திராட்சை, கருப்பு திராட்சைகளுக்கு 4 கணுக்கள் விட்டும், பன்னீர் திராட்சைக்கு 6—8 கணுக்கள் விட்டும் கவாத்து செய்வதால் நல்ல பலன் கிடைக்கிறது.

கவாத்து செய்தவுடன் கொடியின் அடித்தண்டை சுற்றி 2—3 அடிக்கப்பால் மண்ணை 4 அங்குல ஆழம் கிளறிவிட்டு கொடியொன்றுக்கு 100 கிலோ பசுந்தழை, 100 கிலோ தொழுஉரம், 2½ கிலோ அமோனியம் சல்பேட், 2½ கிலோ சூப்பர் பாஸ்பேட், 1 கிலோ பொட்டாசியம் சல்பேட் உரமிட்டு, வாரமொருமுறை தவறாது நீர் பாய்ச்சவேண்டும்

கவாத்து செய்தவுடன் வெடித்து உலர்ந்திருக்கும் பட்டையை நீக்கிவிட்டு, 2½ கிலோ பெர்ரஸ் சல்பேட், ½ பைன்ட் கந்தக அமிலம், 4½ லிட்டர் தண்ணீர் கலந்த கலவையை 'பிரஷ்' கொண்டு தடவி விட வேண்டும். ஒரு மாதத்துக்குப் பின் பூசண நோய்களை ஒழிக்க ஒரு சதவீத போர்டோ கலவையை ஒவ்வொரு வார இடைவெளி விட்டு தெளிக்க வேண்டும். கந்தகப் பொடியையும் ஒவ்வொரு வாரமும் தூவலாம். பூச்சிகளைக் கட்டுப்படுத்த 50 சதவீத டி.டி.டி. (500 கிராம் மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து) தெளிக்கலாம். ஒழுங்காக கவாத்து செய்து 20,000 முதல் 30,000 ரூத்தல் மகசூல் பெறுங்கள்.

(7—5—65 அன்று திரு. ஜே. சாமுவெல் சுந்தரராஜ், தோட்டக்கலை நிபுணர் அவர்கள் ஆற்றிய உரையின் சுருக்கம்)

ஆடுதுறை 27—சிறந்த குறுவை நெல்

அதிக உரமேற்று அதற்கேற்றவாறு மகசூல் கொடுக்கக் கூடிய ஜப்பானிய ரகங்களுடன், இந்திய ரகங்களை ஒட்டுச் சேர்த்து கிடைத்த இனங்களில் சோதனை செய்து பார்த்ததில் அதிக மகசூல் தந்த இனத்தை ஆடுதுறை 27 என்று பொறுக்கு விதையாக 1964-ல் வெளியிட்டார்கள். ஆடுதுறை 27 நெல் எக்கருக்கு 113 கிலோ சூப்பர் பாஸ்பேட்டும், 136 கிலோ அமோனியம் சல்பேட்டும் போட்டு பயிரிட்டதில் ஆடுதுறை 20 நெல்லைக் காட்டிலும் 622 கிலோ அதிக மகசூல் கொடுத்திருக்கிறது. இப் புதிய ரக நெல் ஆடுதுறை 20 போல் 105 நாட்கள் வயதுடனும் அதைவிட அதிக உரமேற்று கதிர் சாயாமல் 45 சதவீத அதிக விளைச்சலையும், 1 சதவீத அதிக அரிசியையும் கொடுக்கக்கூடியது.

மற்ற குறுவை நெல் வகைகளைப் போலவே ஜூன்–ஜூலை மாதம் முதல் செப்டம்பர்–அக்டோபர் வரை இந்த ரகத்தையும் பயிர் செய்யலாம். 20 வண்டி தொழு எரு போட்டு பழுதி நாற்றங்காலைத் தயாரித்து, சென்ட் ஒன்றுக்கு 1½ கிலோ விதை வீதம் 'அக்ரசான்' மருந்து கலந்த விதைகளை ஆனி மாதம் முதல் வாரத்தில் விதைக்கலாம். 24–26 வது நாட்களில் நாற்றைப் பறித்து நடலாம். ஒரு எக்கர் நட 15 சென்ட் நாற்றங்கால் தேவைப்படும்.

நடப்போகும் வயலுக்கு 2,300 கிலோ பசுந்தாள் உரம் அல்லது 10 வண்டி தொழு உரம் இடவேண்டும். கடைசி உழவில் எக்கருக்கு 90 கிலோ சூப்பர் பாஸ்பேட் இட வேண்டும். சிபாரிசு செய்யுமிடங்களில் 15 கிலோ மியூரியேட் ஆஃப் பொட்டாஷ் இட வேண்டும். நடும் சமயத்தில் எக்கருக்கு அம்மோனியம் சல்பேட் 50 கிலோ உரமும் மேலுரமாக 30 நாட்களுக்குப் பின் 50 கிலோவும் இட வேண்டும்.

நாற்றுகளை வரிசையில் 4 அங்குலமும், வரிசைக்கிடையில் 8 அங்குலம் இடைவெளி விட்டும் தூறுக்கு 2–3 நாற்றுகளை நடவேண்டும். நட்டபின் 15-ஆம், 30-ஆம் நாட்களில் இரண்டு முறை களையெடுக்க வேண்டும். பாரதியான் (100 மில்லிலிட்டர் மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து) அல்லது எண்ட்ரின் (100 மில்லி லிட்டர் 100 லிட்டர் தண்ணீரில் கலந்து) நாற்று பறிப்பதற்கு ஒருவாரம் முன்பும் நட்டபின் 15, 30 நாட்களுக்குப் பின்னுமாக 3 முறை மருந்து தெளிக்கவேண்டும். நாற்று நட்ட சுமார் 80 நாட்களில் பயிர் அறுவடைக்கு வரும்.

காவேரி நீர்ப்பாசன பிரதேசத்தில் 1966-ம் ஆண்டிற்குள் 2 லட்சம் எக்கர்களில் ஆடுதுறை 27 ரகத்தைப் பயிர் செய்ய ஒரு விதைப் பெருக்கத் திட்டம் வகுக்கப் பட்டுள்ளது. இதற்காக நிலங்களை உழ இயந்திரக் கலப்பைகளை வாடகையளிப்பதில் முதலிடம் கொடுக்கவும், விவசாயிகளுக்கு மருந்தடிப்பதற்கு இலவசமாக தெளிக்கும் கருவிகளும், தூவும் கருவிகளும் கொடுக்கவும் அறுவடைக்குப் பின் விதையை சுத்தம் செய்துக் கொடுப்பதற்கு குவிண்டாலுக்கு ரூ. 5 உதவித் தொகையும் கொடுக்க ஏற்பாடுகள் செய்யப்படும்.

[14–5–65 அன்று திரு. வெங்கட சுப்ரமணியம், விதைப் பெருக்க அலுவலர் (தீவிர உற்பத்தித் திட்டம்), தஞ்சாவூர் அவர்கள் ஆற்றிய உரையின் சுருக்கம்]

நவீன விவசாய கருவிகளையே பயன்படுத்துங்கள்.

நல்ல மகசூல் கொடுக்க சரியான முறையில் நிலத்தைச் சீர்படுத்த, சமப்படுத்த, சென்னை மாநில விவசாய இலாகா 1946–47 முதல் "டிராக்டர்களை வாடகைக்கு" அளிக்கும் திட்டத்தை ஏற்படுத்தி, இதுவரை சுமார் 3 லட்சம் எக்கர் உழவு செய்யப்பட்டுள்ளது. மேலும் 1951–52 முதல் "தவணை முறையில் டிராக்டர் வழங்கும்" திட்டத்தின்கீழ் ஒரு விவசாயிக்கு ரூ. 20,000 வரை கடன் வழங்கி, ஏராளமான டிராக்டர்கள் விநியோகிக்கப் பட்டுள்ளன.

சாதாரணமாக உபயோகத்திலிருக்கும் நாட்டு கலப்பைகளை தவிர்த்து, அடிமண் வரை சென்று நிலத்தைப் பண்படுத்தும் திருந்திய கலப்பைகளை விவசாயிகளிடையே புகுத்த 1961–62 முதல் "சலுகை விலையில் கலப்பைகள் விநியோகிக்கும் திட்டம்" ஆரம்பிக்கப்பட்டு, மேலூர் கலப்பை, இறக்கை கலப்பைகள் முதலியன விநியோகிக்கப்படுகின்றன. மேலும் பார் கலப்பைகள்கூட பஞ்சாயத்து கமிஷனர் மூலமாக 50 சத சலுகை விலையில் விநியோகிக்கப்படுகிறது.

இரும்பு "இறக்கை கலப்பைகள்" உறுதியாகவும், நீடித்த உழைப்பும், நல்ல உழவும் கொண்டது. விலை ரூ. 25 முதல் 40 வரை ஆகும். கரும்பு, உருளைக்கிழங்கு போன்ற பயிர்களுக்கு தேவையான அகலத்தில், பார் பிடிக்க "பார் கலப்பை" உபயோகப்படும். விலை சுமார் ரூபாய் 100 ஆகும். "ஹூக்கள்" இணைக்கப்பட்டு, குறுக்கு வெட்டுக்கத்திகள் போன்ற இணைப்புகள் கொண்ட "சேறு கலக்கும் கருவி" மண்ணை நன்கு வெட்டி கலக்குகிறது. விலை ரூ. 75 முதல் 160 வரை ஆகும். வயலில் தழை

உதறிய பின், ஒட்ட உபயோகிக்கப்படும் "பர்பியச் சட்டம்" என்ற கருவியின் விலை ரூ. 70 ஆகும். பசுந்தழையை நிலத்தில் பரப்பிய பின் அமுக்க உதவும் "தழை அமுக்கும் கருவி"யின் விலை சுமார் ரூ. 60 ஆகும். வரப்பு கட்டவும், பாத்திகள் அமைக்கவும் உதவும் இரண்டு நீள இறக்கைகளைக் கொண்ட "வரப்புக்கட்டி" யின் விலை ரூ. 60 முதல் 80 வரை ஆகும்.

நிலம் தயாரிக்கவும், விதைத்த பின் விதைகளை மூடவும், மண் கட்டிகளை உடைக்கவும், உபயோகப்படும் 'குண்டகம்' என்ற கருவியின் விலை சுமார் ரூ. 60 ஆகும். விதைத் தட்டு மாற்றத்தின் உதவியால் கேழ்வரகு முதல் நிலக்கடலை வரை எல்லா விதைகளை விதைக்கவும் இடைவெளி, விதைக்கும் ஆழம் முதலிய மாற்றங்களுடனும் கூடிய இயந்திர "விதைக் கலப்பை"யின் விலை சுமார் ரூ. 320 ஆகும். 5 கொழு கொண்ட "விரிவு படுத்தக் கூடிய சாகுபடிக் கருவி"யின் விலை ரூ. 70 ஆகும்.

செலவைக் கணிசமான அளவில் குறைக்கவும், குறைந்த காலத்தில், விவசாய வேலைகளை அதிக நிலப்பரப்பில் செய்யவும், திருந்திய கருவிகளை சகாய விலையில் பெற்று விவசாயிகள் பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்க வேண்டும்.

[21–5–65 அன்று திரு என். சங்கர நாராயண ரெட்டி, கூட்டு விவசாய நெறியாளர் (பொறியியல்), அவர்கள் ஆற்றிய உரையின் சுருக்கம்.]

வடிமுனைக் குழாய் கிணறுகளை அமைத்து நீர்பாசனத்தை பெருக்குங்கள்

நல்ல நீரோட்டமுள்ள மணற் பிரதேசத்தில் வடிமுனைக் குழாய்க்கிணறுகளை சுலபமாகவும், குறைந்த செலவிலும் வடிமுனைக் குழாய் மூலம் அமைக்கலாம். வடிமுனைக் குழாய் என்பது சாதாரணமாக 6 அடி நீளத்தில் நூற்றுக் கணக்கான சிறு துளைகள் கொண்ட குழாய் ஆகும். இக்குழாய் சல்லடை வலையால் சுற்றப்பட்டிருக்கும். இக் குழாய் அடிப்பாகத்தில் கூரான 6 பட்டை கோணமுள்ள இரும்பு சாதனமும், மறுபுறத்தில குழாய்கள் இணைப்பதற்கான மறைகளும் கொண்டது. இவ்வடிமுனைக் குழாய்கள் சாதாரண குழாய்களுடன் இணைக்கப்பட்டு நீரோட்டமுள்ள மணற்பாங்கான இடத்தில் இறக்கப்பட்டு, சுத்தமான நீரை மட்டும் தன்னுள் எடுத்துக்கொள்ள, அது பம்புசெட் மூலம் உறிஞ்சி இறைக்கப்படுகிறது.

குறைந்த பட்சம் 6 அடி கன மணல் கொண்டு, 25 அடி வரை நீரோட்டம் நிறைந்த பகுதிகளில் இதை அமைக்க வேண்டும். இதை இரண்டு முறைகளில் அமைக்கலாம்.

வடிமுனைக்குழாய் அமைக்க ரூ. 320 முதல் ரூ. 450-க்குள் ஆகிறது. இதை தஞ்சை போன்ற பிரதேசங்களில் அமைப்பதால், வாய்க்காலில் நீர் வருவதற்குமுன் நாற்று தயார் செய்ய முடிகிறது. மேலும் கோடையில் நிலக்கடலை, பருத்தி, காய்கறி முதலியன சாகுபடி செய்யலாம். கரும்பு, வாழை போன்ற பயிர்களும் பயிர் செய்யலாம்.

வடிமுனைக் குழாய்க் கிணறுகளை, தேவையான கருவிகளைக் கொண்டு சர்க்காரே ரூ. 25 வாடகையில் அமைத்துக் கொடுக்கிறது. குழாய்க் கிணறுகளில் தண்ணீர் அளவு சோதிக்கப்பட்டபின், மின்விசை மோட்டார் பம்பு செட் அமைக்க ரூ. 1,500-ம் எண்ணெயில் இயங்கும் இயந்திரப் பம்பு செட் அமைக்க ரூ. 3,000-மும் கடன் வழங்கப் படுகிறது. செலவுத் தொகையில் அதிகபட்சம் ரூ. 150 வரை ஒவ்வொரு வடிமுனைக் குழாய்க்கும் மான்யம் வழங்கப்படுகிறது. இதுவரை சுமார் 2,500 வடிமுனைக் குழாய்கள் தஞ்சை மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளன. விரைவு திட்டத்தின் மூலம் ஒரு வருடத்துக்குள் 2,000 குழாய்க் கிணறுகளை அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதற்காக 3½ சதவீத சென்டேஜ் சார்ஜ் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேலும் அடமானப் பத்திரம் எழுதி பதிவு செய்யப்பட வேண்டியதில்லை. விவசாயிகள் இதை நல்ல முறையில் பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்குவீர்களாக.

[28–5–65 அன்று திரு. தண்டாயுதம், துணை விவசாய நெறியாளர் (டிரில்லிங்) அவர்கள் ஆற்றிய உரையின் சுருக்கம்.]

தென்னந் தோப்பு பராமரிப்பு

ஜூலை—ஆகஸ்ட் மாதக் குறிப்பு

சென்ற மாதம் ஒரு மரத்திற்கு 10-ல் இருந்து 12 கிலோ சாம்பல் அல்லது தொழு உரம் அல்லது 21-ல் இருந்து 42 கிலோ குப்பை உரம் வைத்திருக்காவிட்டால் இம்மாதம் வைத்தல் வேண்டும்.

பசுந்தாள் உர விதைகளான சணப்பு, கொளுஞ்சி இவைகளை விதைத்து நாட்டுக் கலப்பையின் மூலம் அல்லது மண்ணை கொத்திவிட்டு மூடலாம். பசுந்தாள் விதைகளை சூப்பர் பாஸ்பேட்டை தெளித்து அதன்பின் விதைப்பது மிகவும் நல்லது.

குருத்து வண்டுகள் மேல் மட்டை இடுக்குகளில் காணப்பட்டால் உடனே குருத்து வண்டு எடுக்கும் ஊக்கினால் எடுத்துவிடவேண்டும். பி.எச்.சி. 10 சதவீத மருந்தும் மணலும் சரிபாகமாகக் கலந்து, குருத்து வண்டுகள் முன் இருந்த துவாரங்களிலும் மட்டையிடுக்குகளிலும் போட்டால் பிறகு அவ்வண்டு வராதபடி தடுக்கலாம்.

கலப்பு உரமிட்டு கைநிறைய மகசூல் பெறுங்கள் !

நீங்கள் கேட்கப்போகும் 'கிராம வானொலி மன்ற' நிகழ்ச்சிகள்.

(வெள்ளிக்கிழமைதோறும் மாலை 6-40 முதல் 7-15 மணி வரை திருச்சி, சென்னை ஏ, திருநெல்வேலி நிலையங்களில் கேளுங்கள்).

2—7—1965

சி. எஸ். ஹெச்.—1 சோளம் பயிரிடுங்கள்
(GROW C. S. H. I. CHOLAM)

சி. எஸ். ஹெச். 1 சோளத்தின் பிறப்பு — நிலத்தின் தன்மையும் சிதோஷ்ண நிலையின் தேவையும்—பயிரிடும் காலம்—பயிரிடும் மாவட்டங்கள்—உரமிடுதல் — சோள தானியத்தின் சிறப்பு—அதாவது மணியின் தன்மை—மகசூலின் சிறப்பு—விதைகள் பெறவேண்டிய விலாசம்.

திரு. ஏ. ஷண்முக சுந்தரம், சிறு தானிய நிபுணர், கோவை.

9—7—1965

நெல் பயிருக்கு உரமிடுதல்
(MANURING PADDY)

பயிர்களுக்குத் தேவையான உணவுப் பொருள்கள்—நெல் பயிருக்குத் தேவைப்படும் முக்கிய உரம்—உரமிடுதலின் அவசியம்—உரமிடவேண்டிய காலங்கள்—உரமிடும் முறைகள்—அதிக உரத்தைத் தாங்கக்கூடிய முக்கிய நெல் வகைகள்—பயிருக்கு உரங்களின் அளவு—முடிவு.

திரு. ஏ. சுப்பிரமணியம், பயிர் நிபுணர். ஆடுதுறை.

16—7—1965

பசுந்தாள் பயிரை வ்ளர்ப்பீர்
(GROW MORE GREEN MANURE)

பசுந்காள் எருவின் முக்கியத்துவம்—அதனால் எற்படும் நன்மைகள்—பசுந்தாள் வகைகள் — ஒவ்வொரு வகையும் பயிரிடும் காலம், எற்ற மண் வகை மகசூல் அதன் நன்மைகள்—பண்ணையில் பசுந்தாள் சுய தேவையை பூர்த்தி செய்ய யோசனை—பசுந்தாள் விதைகள் மாகாணத்தில் கிடைக்குமிடங்கள்.

திரு. எஸ். எம், சுலைமான் விவசாய கூட்டு நெறியாளர், (மாநில விதைப் பண்ணை), சென்னை.

23—7—1965

நெல் பயிரில் விழும் முக்கிய பூச்சிகளும் பூஞ்சண நோய்களும் அவற்றைத் தடுக்கும் முறைகளும்

(IMPORTANT PESTS AND DISEASES OF PADDY AND THEIR CONTROL).

முகவுரை—பூச்சிகளினால் சேதம்—நெல் பயிரின் சேத அளவு—தண்டுப் புழு—விழும் காலம்—தடுப்பு முறைகள்—நாற்றங்காலில் பேன் பூச்சி—தடுப்பு முறை—ஒவ்வொரு பூச்சியும் தாக்கினால் அறிகுறிகள் — பச்சைத் தத்துப்பூச்சி, வெள்ளைத் தத்துப்பூச்சி ஆகியவை நோய்களில் கொலை நோய் இலைப்புள்ளி நோய்—தடுப்பு முறைகள்—நோய் தாக்காத ரகங்கள்—முடிவுரை.

திரு, கே. ஆர். நாகராஜன், பயிர்ப் பாதுகாப்பு நிபுணர், தீவிர மாவட்ட விவசாயத் திட்டம், தஞ்சாவூர்.

30—7—1965

காய்கறி உற்பத்தியைப் பெருக்குவீர்

காய்கறி உற்பத்தி-நாம் சாப்பிடும் அளவு-என் நாம் காய்கறி உட்கொள்ளும் அளவை அதிகரிக்கச் செய்ய வேண்டும்-காய்கறி அபிவிருத்தித் திட்டம் காய்கறி அபிவிருத்தித் திட்டத்தில் அரசாங்கத்தால் விவசாயிகளுக்குக் கிடைக்கும் உதவிகள்-வீட்டுத் தோட்டத்தில் பயிர் செய்ய உகந்த காய்கறி ரகங்கள்-சிறந்த வித்தே அதிக மகசூல் தருகிறது-வித்து பெரும் இடம்-சில பெருவாரியான ரகங்களும் அவற்றை பயிர் செய்யும் முறைகள்-எருவிடுதல் பயிர்ப் பாதுகாப்பு-விதை கிடைக்கும் இடங்கள்.

திரு எஸ். விநாயகம், பிரத்தியேக மாவட்ட விவசாய அலுவலர், (காய்கறிகள்), சென்னை.

(8-ம் பக்கம் தொடர்ச்சி)

25 கிலோ யூரியாவை 200 காலன் தண்ணீரில் கரைத்து ஒரே சீராக இலையின் மீது தெளிக்கவேண்டும். இதன்படி ஒரு கிலோ யூரியாவை 4 காலன் தண்ணீரில் கரைத்து தேவையான அளவிற்கு தெளித்துக்கொள்ளலாம். இவ்வாறு யூரியா தெளிப்பதற்கு முன்னும் பின்னும் நன்முறையில் நிலம் குளிர கரும்புப் பயிருக்கு நீர் பாய்ச்சுதல் சாலச் சிறந்தது, மேலும் நீர்ப்பாசன வசதி நன்முறையில் உள்ள இடங்களில்தான் இம் முறையில் எருவிடுதலினால் நல்ல பலனை அடையலாம்.

இம் முறைப்படி எரு விடுதலால் எரு அளவிலும் செலவிலும் கணிசமான அளவு மீதம் எற்படுகிறது என்பதை பின்வரும் செலவு விபரக் குறிப்பிலிருந்து அறியலாம்,

எரு அளவும் இடும் முறையும் எக்கருக்கு	அம்மோனிபம் சல்பேட். கிலோ	பிண்ணுக்கு. கிலோ	யூரியா.	எரு இடச் செலவு.	மொத்தச் செலவு.
200 ராத்தல் தழைச் சத்து நிலம் மூலம்.	288	435	..	7·00	302·0
100 ராத்தல் தழைச் சத்து நிலம் மூலம் + 50 ராத்தல் தழைச் சத்து இலை மூலம்.	144	218	50	6·80	191·80

செலவில் மீதி (எக்கருக்கு) ரூ. 110.

ஆகவே மற்ற விவசாயிகளும் இம் முறையைக் கையாண்டு கரும்பிற்கு இடும் உர அளவினையும் சாகுபடிச் செலவினையும் குறைத்து குறைவற்ற மகசூலைப் பெற்று பயனடைவீர்களாக.

' விளைபொருள் விற்பனைக் குறியீடு " அக்மார்க் " !

மஞ்சள் விற்பனை

கே. ஸ்ரீராமன், பி.எஸ்ஸி., (விவ), எம். எஸ்ஸி. மாநில வர்த்தக அலுவலர்.
எஸ். பாலசுப்பரமணியன். பி.எஸ்ஸி. (விவ). எடையளவு பிரத்தியேக அதிகாரி.

நம் அன்றுட விவசாயப் பொருள்களின் ஒரு பாகமாக இன்று மஞ்சள் உள்ளது. உலகில் மஞ்சள் விளைவிக்கும் நாடுகளில் இந்தியா முக்கியமானது.

இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த மஞ்சளின் பிறப்பிடம் இந்தியா என பயிர் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இதனுடைய சரித்திரம் வேதங்களைப் போன்று பழமை வாய்ந்ததாகும். 1950-ம் ஆண்டிற்கு முன்பிருந்தே இந்திய வர்த்தகத்தில் மஞ்சள் ஓர் முக்கிய இடம் வகித்து வருகிறது. இந்தியாவில் விளையும் மஞ்சளில் 50 சதவிகிதம் ஆந்திரா மாநிலத்தில் கிடைக்கிறது. அடுத்ததாக சென்னை மாநிலம் அதிக விளைச்சலை அளிக்கிறது.

மஞ்சள் பயிரிடும் முறை மிக முக்கியமானது. பொதுவாக மஞ்சள், நல்ல சத்தான, தண்ணீர் தேங்காத, மண்வளம வாய்ந்த நிலங்களில் தனிப் பயிராகப் பயிரிடப்படுகிறது. சென்னை மாநிலத்தில் கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம் ஆகிய மாவட்டங்களில் மஞ்சள் அதிகம் பயிர் செயயப்படடு, நல்ல விளைச்சலைத் தந்து வருகிறது. சென்னை மாநிலத்தில் மஞ்சள் ஆண்டிற்கு 10,000 ஏக்கர்களில் பயிர் செயயப்படுகிறது. இவற்றுள் 6,500 ஏக்கர் கோயம்புத்தூர் மாவட்டததிலும், 1,300 ஏக்கர் திருச்சி மாவட்டததிலும் 1000 ஏக்கர் சேலம் மாவட்டததிலும் 1,200 ஏககர் தென் ஆற்காடு, வட ஆற்காடு மாவட்டங்களிலும் பயிரிடப்படுகிறது. ஏக்கருக்கு ரூ. 1,200 சாகுபடி செலவு செய்து, இரண்டு டன் மஞ்சள் அறுவடை செய்யப்படுகிறது. ஆண்டிற்கு மொத்த சாகுபடி நிலத்திலிருந்து சுமார் 20,000 டன் மஞ்சள் கிடைக்கிறது. இவற்றுள் 3,000 டன் விதை, சொந்த உபயோகத்திற்காக விவசாயிகள் பயன்படுத்துகின்றனர். மீதி 17,000 டன் உபரி பொருளாக (Marketable Surp'us) விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. இவற்றுள் 4,000 டன் மஞ்சள் உள் நாட்டு உபயோகத்திற்கும், மீதி 13,000 டன் மஞ்சள் கல்கத்தா, பம்பாய், டெல்லி, கொழும்பு, ஆகிய இடங்களுக்கு முக்கியமாக ஏற்றுமதி செய்யபபடுகிறது. இவ்வாறு உள்நாட்டு உபயோகத்திற்காகவும் ஏற்றுமதிக்காகவும் அனுப்பப்படும் முன் மஞ்சள் நன்ருக பக்குவம் செய்யப்படுகிறது. இதற்கு அறுவடை செய்து முடிந்தவுடன் பச்சை மஞ்சளை பசுஞ்சாணம் கரைத்து தண்ணீரில் வேகவைத்து வெய்யிலில் காயவைக்கப்படுகிறது. பின்பு காய்ந்த மஞ்சள் துண்டுகளை கற்களுடன் கூடைகளில் போட்டு நன்ருக குலுக்க இதனுல் மேல் தோல் உறிக்கப்பட்டு மஞ்சள் பளபளப்படைகிறது. தற்பொழுது கூடைகளுக்கு பதில் மஞ்சளை பாலிஷ் செய்வதற்கு நவீனக் கருவிகள் (Mechanical polishers) உபயோகப்படுத்தப்படுகின்றன. நன்ருகப் பக்குவப்படுத்தப்பட்ட மஞ்சள் விற்பனைக்காக சந்தைகளுக்குக் கொண்டு வரப்படுகிறது.

இவ்வாறு விவசாயிகள் உழைத்து, சாகுபடி செய்து அதிக விளைச்சலைப் பெருக்கி பின்பு அதை விற்பனை செய்யும் முறையில் நல்ல பலன் அடைவதில்லை இன்றும் சென்னை மாநிலத்தில் பல வகையான விற்பனை முறைகள் அனுசரிக்கப்பட்டு வருகிறது. சில விவசாயிகள் பொருட்களை தங்கள் கிராமத்திலேயே விற்க எண்ணி சில்லரை வியாபாரிகளிடம் குறைந்த விலையில் விற்க நேரிடுகிறது. சிலர் சேகரிப்பு ஸ்தலத்தில் (Assembliy Centre) இருக்கும் மொத்த விற்பனை வியாபாரிகளினுல் அனுபபப்படும் ஏஜெண்டுகளிடம் தங்கள் கிராமங்களில் விறகின்றனர். இவையல்லாமல் இன்னும் சிலர் சேகரிப்பு ஸ்தலங்களுக்கு பொருளைக் கொண்டு சென்று மொத்த விற்பனை வியாபாரிகளிடம் விற்க நிர்பந்திக்கப்படுகிருர்கள். இதற்குக் காரணம் பயிர் செய்யப்படும் காலத்தில் ஏற்படும் செலவுக்காக விவசாயிகள் அறுவடைக்குப்பின் தங்கள் பொருடகளை மொத்த விற்பனை வியாபாரிகளிடம் விற்பதற்கான சம்மதத்தின் பேரில் கடன் வாங்குவதால் தங்கள் பொருடகளை எவ்விலையாலுைம் மொத்த வியாபாரிகளிடம் விற்க வேண்டிய அவசியமேற்படுகிறது. இதனுல் பொருளுக்கு உரிய விலை கிடைப்பதில்லை.

மஞ்சளுக்கு முக்கியமான சேகரிப்பு ஸ்தலங்கள் ஈரோடு, சேலம், கரூர், ஆகியவையாகும். இவ்விடங்களில் வியாபாரங்களை அதிக அளவில் செய்வது கமிஷன் ஏஜெண்டுகளாவர். இவ்விடங்களில் ஏற்றுமதிக்கு முக்கிய ஸ்தலமாக விளங்குவது ஈரோடு ஆகும். இங்கு சுமார் 40 கமிஷன் வியாபாரிகளும் 35 மஞ்சள் ஏற்றுமதியாளர்களும் இருக்கின்றனர். இச்சந்தைகளில் உள்ள கமிஷன் வியாபாரிகள் எல்லோரும் சேர்ந்து ஒரு சந்தைக்கு ஒரு சங்கமாக அமைத்துள்ளனர். கிராமங்களிலிருந்து விவசாயிகள் மஞ்சளை வண்டிகளில் ஏற்றி மேற்கூறிய சந்தைகளுக்கு தாங்களே கொண்டு வந்து இக்கமிஷன் வியாபாரிகளின் மூலமாக விற்கும் நிலை ஏற்படுகிறது. சங்கத்தால் ஒன்றுபட்ட இக்கமிஷன் வியாபாரிகள், விவசாயிகளின் பொருள்களை நேரிடையாக ஏற்றுமதியாளர்களுக்கு விற்பதற்கு அனுமதிப்பதில்லை. விவசாயிகளின் பொருள்களை ஏற்றுமதியாளர்களிடம் விற்று கொடுப்பதற்காக ரூபாய்க்கு 3 பைசாவிலிருந்து 6 பைசாக்கள் வரை கமிஷன் பெறுகின்றனர். இவையல்லாது நிறுவை கூலி ஒவ்வொரு 50 மூட்டைகளுக்கு 25 கிலோ மஞ்சளும் (பண்டமாக), ரூபாய்க்கு 3 பைசா தரகும் விவசாயிகளிடம் இருந்து வாங்கப்படுகிறது.

'கலவை எரு' நிலத்துக்கு ஏற்றது !

இவற்றிற்கெல்லாம் மேலாக சில விரும்பத்தகாத விற்பனை முறைகளும் கமிஷன் வியாபாரிகளால் அனுசரிக்கப்படுகிறது. இம்முறையில் விவசாயிகள் கொண்டு வந்த மஞ்சளில் சுமார் ஆறு கிலோவை கமிஷன் வியாபாரிகளின் ஏஜெண்டு ஒருவர் சாம்பிளாக எடுத்து, விவசாயியுடன் ஒவ்வொரு ஏற்றுமதியாளரிடம் சென்று விலை பேசுவார். ஏற்றுமதியாளரின் விலை தகுந்த அளவு இருந்தால், விவசாயி அவ்விடத்திலேயே சரி என சம்மதம் தெரிவிக்க வேண்டும். அவ்வாறு இல்லையேல் ஏற்றுமதியாளரின் விலை அவ்விடத்திலேயே நிராகரிக்கப் பட்டுவிட்டதாகப் பொருள். இவ்வாறு ஒவ்வொரு ஏற்றுமதியாளரிடம் சென்று விவசாயியுடன் கமிஷன் வியாபாரியின் ஏஜெண்டு விலை கேட்பார். ஏற்றுமதியாளரின் விலையை ஒப்புக்கொண்டால், மஞ்சள் அந்த ஏற்றுமதியாளருக்கு விற்கப்படும். இம்முறையில் விவசாயிக்கு கூடுதலான விலை கிடைக்கச் சந்தர்ப்பம் இல்லை. இவற்றை விட சற்று சிறந்த முறையை பின்பு கையாளலானார்கள். இதில் விவசாயிகளின் மஞ்சளிலிருந்து 6 கிலோ வரை சாம்பிள்கள் எடுத்து, வாங்குபவர்களின் பார்வைக்கு வைக்கப்படும். மஞ்சளை வாங்கும் வியாபாரிகள் தாங்கள் விரும்பும் விலையைத் தெரிவு செய்வார்கள். இவ்வாறு தெரிவிக்கப்பட்ட விலையில் கூடுதலான விலை விவசாயிக்கு சம்மதமானால்தான் அவ் விலைக்கு மஞ்சள் கொடுக்கப்படும். இம்முறையில் விவசாயிக்கு கூடுதலான விலை கிடைக்க ஏதுவாகிறது. ஆனால் பார்வைக்கு வைக்கப்பட்ட மஞ்சளைப் போன்று மொத்த சரக்கு இல்லையானால் வியாபாரிகள் விலையைக் குறைக்க நேரிடும். மேலும் ஒவ்வொரு வியாபாரியும், சிறிது அளவு மஞ்சளை சாம்பிளாக எடுத்துச் சென்று விடுவார்கள். இவையல்லாது எடையளவு சரியாக இருக்காது. இவ்வாறு மேற்கூறிய முறைகளில் கமிஷன் தரகு, எடை குறைவு என பல குறைகள் உள்ளன.

குறைந்த செலவில் அதிக விலையை விவசாயிக்குக் கிடைக்க வழி செய்யும் விற்பனை முறையே மிகச் சிறந்த முறையாகும். இதற்கு பொருட்களை விவசாயிகள் ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களின் மூலமாக விற்பதனால் இந்த நன்மைகளையும், வசதிகளையும், அடைய முடிகிறது. விவசாயிகள் மஞ்சளை கமிஷன் மண்டியின் மூலம் விற்பனை செய்வதற்கும் ஒழுங்கு முறை கூடங்களின் மூலம் விற்பனை செய்வதற்கும் உண்டாகும் செலவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

61 கிலோ கொண்ட ஒரு மூட்டைக்கு ஆகும் செலவு.

	கமிஷன் மண்டி. ரூ. பை.	ஒழுங்குமுறை விற்பனைக் கூடம். ரூ. பை.
(1)	(2)	(3)
1. தரகு	0 75	..
2. கமிஷன்	1 56	..
3. நிறுவைகள்	0 25	0 04
4. தக்கா	0 19	..
5. உபரி எடை	0 30	..
	3 05	0 04

மேற்கண்டவற்றிலிருந்து மஞ்சளை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் மூலம் விற்பதனால் விவசாயிக்கு செலவு இல்லை என்பது புலனாகிறது. மேலும், மஞ்சளை சேமித்து (Storages) வைப்பதற்கான வசதி, உடனடிப் பட்டுவாடா போன்ற பல வசதிகள் ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் கிடைக்கின்றன. கோயம்புத்தூர் மாவட்டத்தில் மஞ்சள், விவசாய விளைபொருள்கள் சட்டத்தின்கீழ் குறிப்பிடப்பட்டு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலமாக அமுலாக்கப் பட்டுவருகிறது.

மேலும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் மஞ்சள் விற்பனை செய்யும்பொழுது, மஞ்சளை சேமித்து வைத்து மஞ்சள் விளைவு அதிகமில்லாத காலத்தில் விற்பதனால் அதிக லாபம் கிடைக்கிறது. இதற்கு மஞ்சள் சேமித்துவைக்கும் முறைகள் மிக இன்றியமையாதது. தற்பொழுது மஞ்சள் சேமித்துவைப்பதற்கு இரண்டு வகையான முறைகள் கையாளப்பட்டு வருகின்றன. (1) மஞ்சளை பூமிக்கு அடியில் கிடங்குகளில் சேமித்து வைத்தல், (2) திறந்த வெளியில் சேமித்து வைத்தல். கிடங்குகளில் சேமித்து வைக்கும் முறையில், மஞ்சளை சேமித்து வைப்பதற்கு குறைவான இடம் தேவைப்படுகிறது. ஆனால் திறந்த வெளியில் சேமிப்பதற்கு அதிக இடம் தேவைப்படுகிறது. ஆகவே இவ்விரண்டு முறைகளிலும் கிடங்கு சேமிப்பு முறை வெகுவாக கையாளப் பட்டு வருகிறது. ஆனாலும் இவ்விரண்டு சேமிப்பு முறைகளில் எது சிறந்தது என இன்னும் ஆராய்ச்சிகள் நடத்தப்படவில்லை. விரைவில் இவ்விரண்டு முறைகளிலும் சிறந்தது எது என ஆராய்ச்சிகள் செய்ய அரசாங்கம் முயற்சி எடுத்து வருகிறது.

தென்னை நாற்றங்கால்களில் ஜூலை மாதம் கிடைக்கும் தென்னங்கன்றுகளின் விபரம்.

இடம்	கையிருப்பு	விலை
குடியாத்தம்	10000	0-90
சோழவந்தான்	10000	,,
சந்திராபுரம்	22500	,,
சிங்கம்புணரி	15000	,,
திண்டிவனம்	10000	,,
உத்தமபுரம்	9010	,,
பட்டுக்கோட்டை	15000	,,
ஸ்ரீரங்கம்	4000	,,
புத்தாலம்	10000	,,

சம்பா நிலங்களுக்கு அறுபது நாளில் செஸ்பேனியா

]S. N. விவேகானந்தம், பிராந்திய ஆராய்ச்சி நிலையம், ஆடுதுறை.]

தஞ்சையில் உள்ள நஞ்சை நிலங்களுக்கேற்ற தழை உரப்பயிரில் செஸ்பேனியா தலைசிறந்தது. இத்தழை உரம் ஏக்கர் ஒன்றுக்கு 5,000 இராத்தல் விகிதம் அடிப் படை உரமாக இட்டால் அதிக நெல் மகசூல் கிடைக்கும் என்பதும் தெரிந்ததே! தஞ்சையில் உள்ள சம்பா நிலங்களில் ஆற்றுநீர் வாய்க்காலில் வந்த பின்பு குறுகிய காலத்தில் சம்பா நடவுக்குத் தேவையான தழை உரம் விளைவிக்க ஆடுதுறை பிராந்திய ஆராய்ச்சி நிலையத்தில் உரப் பரிசோதனைகள் நடத்தப்பட்டன. இதன் பயனாக ஒரு ஏக்கர் நிலத்திலிருந்து 300 இராத்தல் சூப்பர் பாஸ்பேட்டும், 65 இராத்தல் அமோனியம் சல்பேட்டும் இட்ட செஸ்பேனியாப் பயிர் அறுபது நாட்களில் 31,710 இராத்தல் தழை உரம் கொடுக்கும் எனத் தெரியவந்தது. இப்பரிசோதனையின் முடிவுகள் கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

வரிசை எண்.	ஏக்கருக்கு உரமிட்ட அளவு.	ஒரு ஏக்கரில் கிடைக்கும் மகசூல்.	விளைச்சலின் சதவீதம்.	சாகுபடிச் செலவு.	செஸ்பேனியாவின் மதிப்பும் அதில் உள்ள சத்துக்களும். N.P.K. ரூ.	லாபம்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1	65 இராத்தல் அமோனியம் சல்பேட் (13 இராத்தல்.) ..	15,160	100·0	ரூ. 72·00	75-23-60 ரூ. 104	ரூ. 31
2	65 இராத்தல் அமோனியம் சல்பேட் +150 இராத்தல் சூபர் பாஸ்பேட். ..	24,690	158·1	ரூ. 88·00	125-37-100 ரூ. 155	ரூ. 67
3	65 இராத்தல் அமோனியம் சல்பேட் +300 இராத்தல் சூபர். ..	31,710	203·1	ரூ. 103·00	158-45-120 ரூ. 194	ரூ. 91

இப்பரிசோதனையின் மூலம் ஒரு ஏக்கரில் பயிரிட்ட செஸ்பேனியா தழைப் பயிரிலிருந்து 6 ஏக்கருக்கு வேண்டிய தழை உரம் கிடைக்கிறது. இதில் கிடைத்த 31,710 இராத்தல் தழை உரம் சுமார் 790 இராத்தல் அமோனியம் சல்பேட்டு, 225 இராத்தல் சூபர் பாஸ்பேட், 240 இராத்தல் பொட்டாசியம் சல்பேட் ஆகிய இரசாயன உரங்களுக்குச் சமமாகும். இம்முறையினால் நிலத்துக்கு இயற்கை உரம் கிடைப்பதோடு சிக்கன முறையிலும் உரமிடமுடிகிறது. இவ்விளைச்சலைப்பெற கீழே தரப்பட்டுள்ள குறிப்புகளைக் கையாளவேண்டும்.

(1) வாய்க்காலில் தண்ணீர் வந்ததும் உடனே நீர் பாய்ச்சி இரண்டு தடவை உழுது சமப்படுத்த வேண்டும்.

(2) சமப்படுத்திய பின் ஏக்கருக்கு அமோனியம் சல்பேட் 65 இராத்தலும், சூபர் பாஸ்பேட் 300 இராத்தலும் போடவும்.

(3) ஒரு ஏக்கருக்கு 60 இராத்தல் விதை விதைக்க வேண்டும்.

(4) பூச்சி வராமல் தடுக்க பாரத்தியான் 0·05 சதம் மருந்து தெளிக்கவேண்டும்.

(5) அறுபதாவது நாளில் செஸ்பேனியாவைப் பறித்து விடவேண்டும்.

இம்முறையில் செஸ்பேனியா சாகுபடி செய்வதால் குறைந்த காலத்தில் ஆறு ஏக்கருக்கு வேண்டிய எளிதில் மக்கக்கூடிய தழை உரம் சம்பா நடவுக்குக் கிடைக்கின்றது. இம்முறையினால் பயறு, உளுந்து வகைகள் செஸ்பேனியா விதைக்கு முன்பே சாகுபடி செய்ய ஏதுவாய் உள்ளது. இம்முறை சிக்கனமானதும் லாபகரமானதுமாகும்.

இம்முறையைப் பயன்படுத்தி நஞ்சை நிலத்திற்கு செஸ்பேனியா உரம் இட்டு லாபம் அடையலாம்.

எள் சாகுபடி விஸ்தீரணம் அதிகரிப்பு

எள் சாகுபடிபற்றி 1964–65-க்குத் தயாரிக்கப்பட்டுள்ள மூன்றாவது அனைத்திந்திய மதிப்பீட்டின்படி, சென்ற வருடத்தில் மொத்தம் 60,17,000 ஏக்கராவில் எள் சாகுபடி செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

1963–64-ம் வருடத்தின் இதற்கு சரியான மதிப்பீட்டுடன் (56,68,000 ஏக்கரா) ஒப்பிடுகையில், 1964–65-ல் எள் சாகுபடி விஸ்தீரணம் 3,49,000 ஏக்கரா (6·2 சத விகிதம்) அதிகரித்துள்ளது.

இந்த அதிகரிப்பு பிரதானமாய் ராஜஸ்தானில் ஏற்பட்டுள்ளது; மாற்றுப் பயிர் சாகுபடி முறையும், விலைகள் உயர்ந்திருப்பதும், விதைப்புக் காலத்தில் சாதகமான சீதோஷ்ண நிலைமைகள் நிலவியதுமே இந்த அதிகரிப்புக்குக் காரணமெனக் கூறப்படுகிறது.

கரிசல் நிலத்திற்கு உரமிட்டு கம்புப் பயிரின் விளைவை உயர்த்தவும்

[ப. அ. முஹமது இப்றஹிம், வெ. க. பழனியாண்டி, எஸ். மாலதிதேவி, கோ. நம்மாள்வார்
மண்டல ஆராய்ச்சி நிலையம், கோவில்பட்டி]

சென்னை மாநிலத்தின் முக்கிய உணவுத் தானியப் பட்டியலில் கம்புப் பயிரும் ஒன்று. கம்பு பயிராகும் நிலப் பரப்பு நம் மாநிலத்தில் ஒன்றறை இலட்சம் ஏக்கருக்கு மேற்பட்டதாகும். கம்பின் விளைவை கோவில்பட்டி 1 வித்தால் கனிசமான அளவு உயர்த்த முடிகிறது. கரிசல் நிலங்களில் பயிராகும் கம்பினது விளைவை பெருக்குகின்ற நோக்கத்தோடு பொறுக்கு வித்தான கே. 1. கம்புப் பயிரில் கோவில்பட்டி ஆராய்ச்சி நிலையத்தில் சென்ற ஆண்டு ஒரு சோதனை செய்து பார்க்கப்பட்டது.

கரிசல் நிலங்களுக்கு இடுவதற்குத் தொழு உரம் கிடைப்பது அரியதொரு பிரச்சினையாயிருக்கிறது. மேலும் இரசாயன உரத்தின் விலையைவிட தொழு உரத்தின் விலைவு தூக்கலாக இருக்கிறது. இதைக் கருத்தில் கொண்டு எந்த உரம் கம்புப் பயிருக்கு ஏற்றது என்பதைக் கண்டறியும் நோக்கத்தோடு சோதனை தொடங்கப்பட்டது.

அமோனியம் சல்பேட்டும் தொழு உரமும் ஆராய்ச்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டன. அவை இடுவதற்குப் பாத்திகள் நான்கு பிரிவுகளாகப் பகுக்கப்பட்டன.

(1) உரம் இடாதது.

(2) தொழுஉரம் ஹெக்டருக்கு 6·28 டன்களும் அம்மோனியம் சல்பேட்டு 56·04 கிலோவும்.

(3) தொழுஉரம் ஹெக்டருக்கு 12·56 டன்கள் மட்டும்.

(4) அமோனியம் சல்பேட்டு ஹெக்டருக்கு 112.08 கிலோ மட்டும்.

நிலங்களில் விதைப்பதற்கு முன்பாகவே உரங்கள், (அடி உரமாக) இடப்பட்டன. ஒன்றறை அடி இடைவெளி விட்டு கம்பு விதைக்கப்பட்டது. வரிசையில் விதைப்பதற்கு 'கொரு' ஒரு சிறந்த கருவி. ஐப்பசியில் பருவ மழை தொடங்கிய பின்பு கே. 1 கம்பு விதைகள் விதைத்து மூடப்பட்டன. 25 நாட்கள் சென்ற பிறகு நாட்டுக் கலப்பை கொண்டு இருவரிசைப் பயிருக்கு மத்தியில் பயிருழவு செய்யப்பட்டது. அதன் பிறகு செடிக்குச் செடியுள்ள இடைவெளி ஆறு அங்குலம் விட்டு செடிகள் கலைக்கப்பட்டன. பின்பு நேர்த்திகள் எல்லா பயிருக்கும் ஒன்று போல் செய்யப்பட்டன. ஐப்பசியில் விதைத்த பயிர் தை முடிவில் அறுவடைக்கு வந்தது. விளைந்த தானியமும் தட்டையும் நிறுக்கப்பட்டன.

ஹெடக்ரில் கிடைத்த விளைச்சல் (கிலோ கிராம்) கீழ்வருமாறு.

எண்.	உர வகை.	தானியம் கிலோ.	தட்டு. கிலோ.
(1)	(2)	(3)	(4)
1	உரமிடாத நிலம்	369·3	924
2	தொழு உரம் ஹெக்டருக்கு 6.28 டன்னியும் அம்மோனியம் சல்பேட்டு ஹெக்டருக்கு 56·4 கிலோவும்.	416·8	1,000
3	தொழு உரம் எக்கருக்கு 12·56 டன்னிட்டும்	336.8	924
4	அமோனியம் சல்பேட்டு ஹெக்டருக்கு 112·8 கிலோ மட்டும்.	469·3	1220

அம்மோனியம் சல்பேட்டு இட்ட பயிரே அதிக விளைச்சல் தந்திருக்கிறது. தானியத்தின் விளைவோடு தட்டையின் விளைவும் கூடியிருக்கிறது. உரமிடாத பயிரைவிட அமோனியம் சல்பேட்டு ஹெக்டருக்கு 112·8 கிலோ வீதம் இட்ட பயிர் அதிகமாகத் தந்திருக்கிற விளைவு ஹெக்டருக்கு 100 கிலோ தானியமும் எறத்தாழ 300 கிலோ தட்டையும் ஆகும்.

உரம் இடுவதானல் நிஸத்தின் தரம் கெடுகிறது என்னும் தப்பெண்ணத்தைத் தவிர்ப்பதற்காக வேண்டி விதைப்பதற்கு முன்பாகவும் விளைவை அறுத்ததற்கு பின்பாகவும் மண் சோதனை செய்யப்பட்டது. இந்த ஆராய்ச்சியின் முடிவுகள் நிலம் உரம் இட்டதனல் வளம் அடைந்திருப்பதாகவே காட்டுகின்றன. உரம் இடுவதால் தானியத்தின் தரமும் தட்டையின் தரமும் வேறுபடுகின்றனவா என்றும் சோதனை செய்து பார்க்கப்பட்டது.

அமோனியம் சல்பேட்டு இட்ட பயிரிலும் அமோனியம் சல்பேட்டுடன் தொழு உரம் கலந்து இட்ட பயிரிலும் தானியத்தில் உள்ள புரதச் சத்து உரம் இடப்படாத பயிரை விட கூடுதலாக உள்ளது. தட்டையின் தரமும் கெட்டு விடாத நிலையில் இருக்கிறது.

உரம் இடுவீர் கம்புக்கு, உயர்த்திடுவீர் அதன் விளைவை!

ஜூலை 1965ல் தோன்றக்கூடிய கால்நடை நோய்கள் பற்றிய முன்னறிவிப்பு

வெக்கை நோய் தஞ்சாவூர் கிழக்கு, மேற்கு, சரகங்களிலும், வடாற்காடு செங்கல்பட்டு மாவட்டங்களில் தோன்றக் கூடும்.

சப்பைநோய் சேலம் (வடக்கு சரகம்) மதுரை, தஞ்சாவூர் (மேற்கு சரகம்), தென்ஆற்காடு ராமநாதபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் தோன்றக்கூடும்.

அடைப்பான் நோய் வடஆற்காடு மாவட்டத்தில் தோன்றக்கூடும்.

1965-ம் ஆண்டு ஏப்ரல் மாதக் காலநிலை அறிக்கை

[சி. பாலசுப்பிரமணியன், பி. ஏ., பி.எஸ்ஸி (ஏஜி.,) சி. ரங்கநாதன், பி.எஸ்ஸி. (ஏஜி.),
விவசாயக் காலநிலை ஆய்வுப் பிரிவு, கோயமுத்தூர்-3.]

இம்மாதம் முதல் தினத்தில் தமிழகத்தில் ஆங்காங்கு மழை பெய்தது. அடுத்த நான்கு நாட்களில் சிற்சில இடங்களில் மழை பெய்தது. ஆனால் 1965-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6-ந் தேதி தமிழகத்தின் உட்புறப் பகுதிகளில் மட்டும் ஆங்காங்கு இலேசான மழை பெய்தது. எஞ்சிய இடங்களில் வரட்சியே நிலவியது. பின்னர் 1965-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7-ந் தேதியன்று சிற்சில இடங்களில் மட்டும் மழை பெய்தது. அடுத்த ஏழு நாட்களில் வானிலை வரண்டிருந்தது. 1965-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15-ந் தேதியன்று தமிழகத்தின் சிற்சில இடங்களிலும் 1965-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16-ம் தேதி ஆங்காங்கும் மழை பெய்தது. அதன் பின்னர் 17, 18 தேதிகளில் சிற்சில இடங்களில் மழை பெய்தது. ஆனால் 19, 20, 22 தேதிகளில் ஆங்காங்கு மழையிருந்தது. 21, 23, 24, 25 தேதிகளில் தமிழகத்தின் சில இடங்களில் மட்டும் மழை இருந்தது. 1965-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26-ந் தேதி முதல் 1965-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முடிய மூன்று நாட்களில் தமிழகம் முழுவதும் வரட்சி நிலவியது. இம் மாதத்தின் கடைசி இரு நாட்களில் சில இடங்களில் இலேசான மழை பெய்தது.

இம் மாதத்தில் பகல் வெப்பநிலையில் மாறுதல்கள் இருந்தன. பகல் வெப்ப நிலை இருபது நாட்களில் சராசரிக்குக் குறைவாகவும், நான்கு நாட்களில் சராசரிக்கு சரியாகவும், ஒரு நாள் சராசரிக்கு அதிகமாகவும் இருந்தது. ஏனைய நாட்களில் இம்மாநிலத்தின் ஒரு சில பகுதிகளில் மட்டும் சிறிது ஏற்றத் தாழ்வுகள் இருந்தன.

காலநிலையும் பயிர் வளர்ச்சியும்

செங்கற்பட்டு மாவட்டத்தில் இம்மாதம் போதிய அளவு மழையில்லை. திரூர் பகுதியில் நவரை நெற்பயிர் அறுவடைக்கு வந்தது. இங்கு நிலக்கடலை, நெற்பயிர் முதலியவைகளை நோய்களும் பூச்சிகளும் தாக்கவில்லை. தென்னாற்காடு, வடஆற்காடு பகுதிகளில் சற்று அதிக மழை இருந்தது. போளூர் பகுதியில் மட்டும் மழையில்லை. திருவண்ணாமலை, தண்டாரப்பேட்டை பகுதிகளில் ராகி, நெற்பயிர் முதலியன அறுவடைக்கு வந்தன. இங்கு நெற்பயிரில் நாவாய்ப் பூச்சிகளும், குருத்துப் பூச்சிகளும், கத்திரியில் புள்ளி வண்டுகளும், கரும்பில் துளைப்பான்களும் காணப்பட்டன. மேலும் ராகியில் கொள்ளை நோயும், நிலக்கடலையில் டிக்கா இலைப் புள்ளி நோயும் காணப்பட்டன. குடியாத்தம் பகுதியில் கரும்பை துளைப்பான்கள் தாக்கின. பாலூரில் நெல் அறுவடைக்கு வந்தது. திண்டிவனம் பகுதியில் நிலக்கடலை, எள் பயிர் முதலியன இம் மழையால் பயனடைந்தன. ஆனால் எள் பயிரில் இலைக்கூட்டுப் புழுக்களும், நிலக்கடலையில் சுருள் பூச்சிகளும் காணப்பட்டன.

தஞ்சாவூர் மாவட்டத்தில் சற்று கனத்த மழைபெய்தது. இம் மழையால் காய்கறிப் பயிர்கள், பச்சைப் பயிறு, மற்றும் நிலக்கடலை முதலியன அறுவடைக்கு வந்தன. தாளடி நெற்பயிரும், பருப்பு வகைகள், நிலக்கடலை முதலியன அறுவடையாயின. ஆடுதுறையில் நிலவிய வரண்ட சீதோஷ்ணம் நெல்மணிகளை உலர்த்தவும் வைக்கோல் போர் கட்டவும் உதவியது. பட்டுக்கோட்டையில் நிலக்கடலைப் பயிரில் சிறிதளவு டிக்கா இலைப் புள்ளி நோய் காணப்பட்டது. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இம் மாதம் போதிய மழை பெய்தது. அரியலூரில் பெய்த மழை சோளப் பயிருக்கு உகந்திருந்தது. நெற்பயிரை நாவாய்ப் பூச்சிகளும், மிளகாயை பழம் அழுகல் நோயும் மிதமாகத் தாக்கின. கரூர் பகுதியில் நெல், ராகி, பருத்தி, சோளம், காய்கறிப் பயிர்கள், நிலக்கடலை, எள் முதலியவற்றிற்கு இம் மழை ஏற்றதாயிருந்தது. மேலும் நிலங்கள் தயாரிக்கவும், சோளம், ராகி, நிலக்கடலை, முதலியவற்றின் அறுவடைக்கும் இம் மழை உதவியது. இங்கு சோளப் பயிரில் இலைப்புப் பேனும் நிலக்கடலையில் சுருள் பூச்சிகளும் காணப்பட்டன. மதுரை இராமநாதபுரத்தில் போதிய அளவு மழை இல்லை. பரமக்குடியில் பெய்த மழையால் நெற்பயிர் பயனடைந்தது. சிவகங்கையில் பெய்த மழை பருத்தி, நிலக்கடலை முதலிய பயிர்களுக்கு ஏற்றதாயிருந்தது. மேலும் இம் மழையால் நிலங்கள் தயாரிக்கப்பட்டன. ராகி நாற்றங்கால்கள் விதைக்கப்பட்டன. இப் பகுதியில் பருத்திப் பயிரில் நாவாய்ப் பூச்சிகளும், நிலக்கடலையில் அசுவினியும், சுருள்பூச்சிகளும் கத்தரியில் புள்ளிவண்டுகளும் சிறிதளவு காணப்பட்டன. உசிலம்பட்டி பகுதியில் நிலக்கடலையிலும், கரும்பிலும் களை எடுக்கவும் ராகிப் பயிருக்கு நிலங்கள் உழுது பண்படுத்தவும் உதவியது. இங்கு சோளத்தை கதிர் வண்டுகளும், திராட்சையை சாம்பல் நோயும், நிலக்கடலையை அசுவினியும் மென்மையாகத் தாக்கின. திருநெல்வேலி மாவட்டத்தில் அதிக மழை பெய்திருக்கிறது. கோவில்பட்டியில் கருங்கண்ணி பருத்தி வகைகளும், சோளப் பயிரும், அம்பாசமுத்திரத்தில் கிளைரிசிடியா, செஸ்பேனியா முதலிய பசுந்தாளுரச் செடிகளும் இம் மழையால் பயனடைந்தன. இங்கு பருத்தியில் சிறிது அசுவினியும், நாவாய்ப் பூச்சிகளும், காய்ப் புழுக்களும் மிதமாகக் காணப்பட்டன. மிளகாய்ப் பயிரை பழம் அழுகல் நோயும் இலைப் புள்ளி நோயும் தாக்கின.

கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவில் பகுதியில் சற்று அதிகமான மழை பெய்தது. இம் மழையால் தென்னந் தோப்புகளும், பழமரங்களும் பயனடைந்தன மாவள்ளிக்கிழங்கு நடவுக்கும், நிலக்கடலை விதைக்கவும், நெர்பயிருக்கு நிலங்கள் தயாரிக்கவும் இம் மழை உகந்திருந்தது. கன்னியாகுமரியில் கொய்யா மரத்தில் மாவுப் பூச்சிகளும், பேனும் காணப்பட்டன.

சேலம் மாவட்டத்தில் ஆத்தூரில் சற்று அதிகமான மழையிருந்தது. கரும்பு, ராகி-நெல், சோளம் முதலியன இம் மழையால் டயனடைந்தன. கம்பு விதைக்கவும், இம் மழை உதவிற்று. இராசிபுரம் பகுதியில் சோளப் பயிரில் மிக அதிகம்ாக இலைப் பேன்கள் காணப் பட்டன. மேலும் சரும்பைத் தூளைப்பான்கள் தாக்கின. கோ. 11 சோளப் பயிரில் இலைப் புள்ளி நோய் மிக அதிகமாகக் காணப்பட்டது.

கோயமுத்தூர் மாவட்டத்தில் பெய்த மழை கரும்பு, சோளம், நவரை நெற்பயிர், நிலக்கடலை மற்றும் காய்கறிப் பயிர்கள் முதலியவற்றிற்கு உதவியது. இங்கு நெற்பயிரில் நாவாய்ப் பூச்சிகளும், குருத்துப்பூச்சிகளும் சோளப் பயிரில் கதிர் வண்டுகளும், ராகியில் அசுவினியும், நாவாய்ப் பூச்சிகளும், புழுக்களும், கொள்ளை நோயும், தென்னையில் சிவப்பு வண்டுகளும், தென்னை வண்டுகளும் மிதமாகக் காணப்பட்டன. ஆளியார் நகரில் பெய்த மழை நிலக்கடலைப் பயிருக்கு உகந்திருந்தது.

இம் மாதத்தில் நீலகிரி மாவட்டத்தில் சுமாரான மழையிருந்தது. பொதுவாக எல்லாப் பயிர்களும், தோட்டக்கால் பயிர்களும் இம் மழையால் டயனுற்றன,

இம் மாதத்தில் குறிப்பிடத்தக்க மழையளவுகளும், பிராந்திய மழையளவுகளும் வருமாறு :—

குறிப்பிடத்தக்க மழையளவுகள்

(அங்குலத்தில்)

வரிசை எண்.	தேதி.	இடத்தின் பெயர்.	பெய்த மழையின் அளவு.
1	6-4-1965	கோடைக்கானல்	2·68
2	6-4-1965	ஆளியார் நகர்	1·70
3	15-4-1965	கூனூர்	1·70
4	16-4-1965	அம்பாசமுத்திரம்	1·74
5	17-4-1965	விவசாயக் கல்லூரி, கோவை	1·69
6	28-4-1965	கோவில்பட்டி	1·85

பிராந்திய மழையளவுகள்

அ(ங்குல்த்தில)

பிராந்தியம்.	எப்ரல் மாத மழை யளவு.	சராசரியிலிருந்து மாறுபாடு.	குறிப்பு.
(1)	(2)	(3)	(4)
1 வட பிராந்தியம்	1·7	+1·0	அதிகம்
2 கீழ்க்கரை பிராந்தியம்	2·2	+1·0	ஷை
3 மத்திய பிராந்தியம்	2·9	+0·8	ஷை
4 தென் பிராந்தியம்	2·6	+0·1	சற்று அதிகம்
5 மலைப் பிராந்தியம்	4·3	—0·1	ஷை

1965-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்திய காலநிலை அறிக்கை மழைஅளவு (அங்குலத்தில்).

இடத்தின் பெயர்	இம்மாத மழை யளவு.	சராசரியிலிருந்து மாறுபாடு.	ஜனவரி 1-ம் தேதி முதல் மொத்த மழை யளவு
(1)	(2)	(3)	(4)
வட பிராந்தியம்.			
சென்னை (மீனம்பாக்கம்).	1·8	+1·2	2·3
திரூர் குப்பம்*	0·5	—0·2	0·5
வேலூர்	2.9	+1·9	2·9
குடியாத்தம்*	1·7	+0·9	1·7
கீழ்க்கரை பிராந்தியம்.			
பாலூர்*	1·7	+1·1	2·8
திண்டிவனம்*	2·7	+1·3	2·8
கடலூர்	0.8	—0·2	0·9
நாகப்பட்டினம்	3.7	+2·6	4·3
ஆடுதுறை*	1·7	+0·7	1·9
பட்டுக்கோட்டை * ..	2·4	+ 0·2	4·2
மத்திய பிராந்தியம்.			
சேலம்	2·4	+0·5	2·7
சேலம்*	4·0	+2·6	4.1
கோயம்புத்தூர்* ..	4·2	+2·7	4·3
கோயம்புத்தூர் ..	1·7	+0·1	1·8
ஆளியார்நகர்*	2.7	—1·1	3·8
திருச்சிராப்பள்ளி ..	2·4	—L	2·6
தென் பிராந்தியம்.			
மதுரை	1·2	—0·9	1·8
பாம்பன்	1·5	—0·4	4·5
கோவில்பட்டி*	4·9	+1·7	5·3
பாளையங்கோட்டை ..	3·1	+0·6	3·6
அம்பாசமுத்திரம்* ..	3·0	—0·2	4·7
நாகர்கோயில்*	3·5	+0·5	8·4
கன்னியாகுமரி* ..	0.7	—1·8	0·8
மலைப் பிராந்தியம்.			
கோடைக்கானல் ..	8·0	+3·1	10·2
கூனூர்	5·2	—0·3	11·7
உதகமண்டலம்* ..	2·4	—0·7	2·8
நஞ்ச நாடு*	1·6	—2·6	2·4

* சென்னை விவசாய இலாகாவின் ஆராய்ச்சிப் பண்ணைகள்.

L 0·04″

Registered No. M-4646.

©
தமிழ்நாடு அரசாங்கம்
1965

வரப்புகளில் ஆமணக்கு பயிரிடுங்கள்

* ஆமணக்கு முக்கியமான ஒரு எண்ணெய் வித்தாகும்.

* அதிக அந்நிய செலாவணி பெற ஆமணக்கு பயிரிடுங்கள்.

* அதிக வரட்சியையும் தண்ணீர் தேங்குவதையும் சமாளிக்கும் ஆற்றலுடையது.

* மண்வளப் பாதுகாப்பு திட்டத்தின்படி போடப்பட்டுள்ள புதிய வரப்புகளில் ஆமணக்கு பயிரிடுங்கள்.

* வரப்புகளில் பயிரிடுவதால் மண் அரிப்பைத் தடுக்கும்.

* வரப்போரங்களில் பயிரிட்டு அதிக ஊதியம் பெறுங்கள்.

* பொறுக்கு ரக விதைகளை உபயோகியுங்கள்.

* 4 முதல் 8 அடி இடைவெளி கொடுத்து விதையுங்கள்.



தமிழ்நாடு அரசாங்க அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு
விவசாயச் செய்தி அலுவலரால் தொகுக்கப்பட்டு
விவசாயத் துறை நெறியாளரால்
வெளியிடப்பட்டது.